விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 14 வியாழக்கிழமை (26.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 069

SATS-TECH ENGINEERS

NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# போரை நிறுத்த முடியாது என்று ஐரோ.ஒன்றியத்துக்கு அரசு பதில்

## பேச்சு அவசியமில்லை எனவும் தெரிவிப்பு

(கொழும்பு)

போரை நிறுத்தவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் விடுத்த வேண்டுகோளை நிராகரிப்பதாக அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கலாம். ஆனால் அரசாங்கத்துடன் பேச்சுக்கு வரவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார். (12ஆம் பக்கம் பார்க்க)

## நவீன ரக ஆயுதங்களை இறக்க விடுதலைப் புலிகள் முயற்சி

### பாலித கோஹன்ன தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் அண்மைக் காலங்களில் விமான எதிர்ப்பு மற்றும் நவீனரக ஆயுதங்களை சர்வதேசத்திடம் இருந்து கொள்வனவு செய்ய முயற்சித்துள்ளமைக்கான ஆதாரங்கள் இருக்கின்றது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார்.

தொலைபேசி ஊடாக வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, குறித்த ஆயுதங்கள் மிகவும் வெப்பமான வெடி பொருட்களைக் கொண்டிருக்கும். அத்துடன் அந்த ஆயுதங்கள் இரசாயனக் கலவை கொண்டதாகவும் அவை மக்களுக்கு மூச்சுத்திணறலை ஏற்படுத்தக் கூடியவையுமாகும்.

இதற்கான ஆதாரங்கள் புலிகளின் தகவல் பரிமாற்றங்களை (12ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் குற்றப் புலனாய்வுத்துறை விசாரணை

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்ற குற்றப்புலனாய்வு பொலிஸார் விசாரணை செய்ய வேண்டும் என்றும் தலைமை அலுவலகத்திற்கு வருமாறும் அழைப்பு விடுத்தனர்.

அதனை ஏற்று, குற்றப்புலனாய்வுத்துறை தலைமை அலுவலகத்திற்கு சென்ற இரா.சம்பந்தன், சுமார் ஒன்றரை மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு பகுதியில் இரு தரப்பும் தீவிர மோதல்

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு நகருக்குள் பிரவேசித்து அங்கு நிலைகொண்டுள்ள படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக படைத்தரப்பு தெரிவிக்கின்றது.

நேற்று முன்தினம் மாலை முதல் உக்கிரமடைந்துள்ள இந்த மோதல்களின்போது புலிகள் தரப்புக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் படைத்தரப்புக்கும் சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மோதலையடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலி உறுப்பினர்களின் 21 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷில் இராணுவப் புரட்சி

(டாக்கா)

புங்களாதேஷில் புற இராணுவப் படையினர் நேற்று திடீர் புரட்சியில் இறங்கினர். சரமாரியாக அவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மேஜர் ஜெனரல் உட்பட 30 பேர் கொல்லப்பட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுமார் 5 மணிநேர எறிகணை வீச்சு வன்னியில் நேற்றும் 22 பேர் பலி

(கொழும்பு)

வன்னியில் ஆட்லெறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் நேற்று 22 பேர் உயிரிழந்துள்ளதுடன் 41 பேர் காயமடைந்துள்ளனர்.

மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகள் மீது நேற்று புதன்கிழமை அதிகாலை தொடக்கம் காலை 10 மணிவரை எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதில் 22 பேர் உயிரிழந்ததுடன் 41 பேர் காயமடைந்துள்ளனர்.

உ.மகேஸ்வரி (வயது 45), யோ.வனிதா (வயது 21), ச.தர்மலிங்கம் (வயது 68), இ.வாகினி (வயது 26) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். ஏனையோரின் பெயர் விபரம் கிடைக்கப் பெறவில்லை.

யோ.இந்திரராணி (வயது 41), த.யோகராசா (வயது 41), இ.ரவீந்திரகுமார் (வயது 39), வ.ராதிகா (வயது 40), உ.அனுராஜ் (வயது 18), த.சரஸ்வதி (வயது 57), இ.வரன் (வயது 11), இ.நளினி (வயது 16), பா.டினேஸ் (வயது 14), க.அமிர்தலிங்கம் (வயது 57),

பொ.புண்ணியமூர்த்தி (வயது 38), க.யேந்தபத்மினி (வயது 54), க.ஆனந்தன் (வயது 34), ஆ.யுவனேஸ், நிரோசன் (வயது 26), சி.புலேந்திரன் (வயது 21), சு.புஸ்பானந்தன் (வயது 33), ஆ.குகனேசன் (வயது 27), பாலேந்திரன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

***5ஆம் கட்டமாக முல்லைத் தீவில் இருந்து திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 386 பேரின் பெயர் விபரங்கள்.***

## ஈழத்தமிழ் மக்களை காப்பாற்றக் கோரி இலங்கை அகதி தீக்குளித்து தற்கொலை

(சென்னை)

தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே வாழ்ந்த இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்றுத் தீக்குளித்து தற்கொலை செய்துள்ளார்.

இவர் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி உருக்கமாக ஒரு கடிதத்தையும் எழுதி வைத்துள்ளார். இதனால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையைச் சேர்ந்தவரான பாலசுப்பிரமணியம் கோகுலரத்தினம் (வயது 55) என அடையாளம் காணப்பட்டுள்ள இவர் 1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு அகதியாக சென்றுள்ளார்.

பின்னர் இந்தியக் குடியுரிமை பெற்று அரசு சார்பில் சிவகாசியை அடுத்த ஆனையூர் காந்தி நகரில் உள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவிலிருந்து 386 பேர் கப்பல் மூலம் திருமலை சென்றனர்

(திருகோணமலை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளன் பகுதியில் இருந்து கிறீன் ஓசியானிக் கப்பல் மூலம் நேற்று முன்தினம் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 386 நோயாளிகளில் ஒருவர் கப்பல் திருகோணமலையை போய்ச்சேரும் முன்னரே இறந்துவிட்டதாக திருகோணமலை மருத்துவப் பணிகள் இணைப்பாளர் மருத்துவர் ஞானகுணாளன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இறந்தவர் கிளிநொச்சியைச் சேர்ந்த என்.ஸ்ரீதக்சன் (வயது 53) என்பவராவார்.

இதுவரை திருகோணமலைக்கு ஐந்து தடவை கொண்டு செல்லப்பட்ட மொத்த நோயாளிகளில் 12பேர் இறந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்களில் இருவர் கண்டிக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டவேளை அங்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 5ஆம் கட்டமாக திருகோணமலைக்கு அழைத்துச்செல்லப்பட்ட நோயாளர்கள்

## 386 பேரின் விபரங்கள்

என்.தவமணி (வயது 47) பொக்கணை, எஸ்.குலசிங்கம் (வயது 20), கே.ஜெகதீஸ் பள்ளித்துறை யாழ்ப்பாணம், கே.இளந்திரையன் (வயது 46) முள்ளியடி பளை, துஸ்யந்தன் (வயது 9) முல்லைத்தீவு, சிவமலர் (வயது 63) முள்ளியவளை, நாகேஸ்வரன் (வயது 47) முல்லைத்தீவு, ரி.சரஸ்வதி (வயது63) பருத்தித்துறை,

கே.மணிமாலா (வயது 43) முருகண்டி, அமிர்தராஜ் (வயது 61) முள்ளியவெளி, கனகசபாபதி (வயது 67), ரி.இம்மானுவேல் (வயது 60), ஐ.திலகவதனம் (வயது 50) விசுவமடு, ஜே.காந்தரூபி (வயது 35) ஜெயபுரம், தனுசன் (வயது 7) கிளிநொச்சி, தனுசன் (வயது 9) கிளிநொச்சி,

கௌசிகன் (வயது 4) கிளிநொச்சி, ஜெயகுமரன்(வயது 30) கிளிநொச்சி, ரி.சாந்தன் (வயது 62) முல்லைத்தீவு, எஸ்.மரியா (வயது 59) முல்லைத்தீவு, எஸ்.தர்மலிங்கம் (வயது 77) தாமரைக் கேணி, காந்தரூபன் (வயது 19) இராமநாதபுரம் கிளிநொச்சி,

எஸ்.கந்தசாமி (வயது 59) இராமநாதபுரம் கிளிநொச்சி, ஜி.திரேசா (வயது49) கிளிநொச்சி, எஸ்.சந்திராதேவி (வயது60) முல்லைத்தீவு, பி.இந்திராதேவி (வயது 58) முல்லைத்தீவு, பி.மகேஸ்வரி (வயது 68) வட்டக்கச்சி, ஆர்.துஸ்ரி (வயது13), என்.சிறிதரன் (வயது 53) கிளிநொச்சி,

பி.றோஜிதா (வயது 8) விஸ்வமடு, ஜெயசுதா (வயது 35) விசுவமடு, எஸ்.சின்னம்மா (வயது 68) செல்வபுரம், கே.நாராயணசாமி (வயது45) முள்ளியவளை, என்.பகிரதன் (வயது18) குகன்வழி முள்ளியவளை, ரி.துரைரத்தினம் (வயது 71) தெல்லிப்பழை, ரி.சீதா (வயது66) தெல்லிப்பழை, என். சிறிதேஸ்ரன் (வயது 53) கிளிநொச்சி, பி.கமல்மிபுனி (வயது 21) தெல்லிப்பழை,.

கே.இந்துமதி (வயது 44) புதுக்குடியிருப்பு, பி.கணேசமூர்த்தி (வயது 46) வவுனியா, ஐ.ஜதுகரன் (வயது 17) முறிப்பு, எம்.கறுப்பையா (வயது58) கொக்காவில் கிளிநொச்சி, வி.நல்லையா (வயது 85) செல்வநகர் கிளிநொச்சி, எஸ்.ஜெசிந்தவா (வயது 7) முறிப்பு, வி.கதிரவேல் (வயது 70) செல்வநகர் கிளிநொச்சி, என்.சிறிவிக்னேஸ்வரன் (வயது 46) முல்லைத்தீவு, கே.மோகன் (வயது 42) முல்லைத்தீவு,

என்.சிவகுமார் (வயது 34) கிளிநொச்சி, எம்.சசிக்குமார் (வயது 15) கனகராசன்குளம், என்.சாரதா (வய்து 33) கனகபுரம், என்.சயந்தினி (வயது 5) கனகபுரம், என்.ஜெயந்தினி (வயது 8) கனகபுரம், பி.வேலாயுதம் (வயது 61) காரைநகர் யாழ்., எஸ்.மரியன்சலமை (வயது 80) யாழ்ப்பாணம், கே.ஜோகீஸ்வரி (வயது 34) கிளிநொச்சி, கோகுலவதனி (வயது 4) கிளிநொச்சி,

கே.நவரத்தினராஜா (வயது 55) புதுக்குடியிருப்பு, பி.ஏ.கௌசல்யா (வயது 47) பொக்கணை, ரி.சரஸ்வதி (வயது 63) புதுக்குடியிருப்பு, ஜி.சறோஜாதேவி (வயது 36) கிளிநொச்சி, ஜி.கர்சன் (வயது 4) கிளிநொச்சி, என்.கமலேஸ்வரன் (வயது 41) முள்ளியவளை, என்.ஜெயக்குமார் (வயது33) கனகபுரம், எஸ்.இந்துமதி (வயது 35) விநாயகபுரம், நிலரேஷன் (வயது 8) விநாயகபுரம், எஸ்.துஷ்மின் (வயது 7) விநாயகபுரம், மோகனதாசன் (வயது 17) கனகபுரம், வி.சிவராஜா (வயது 52) முல்லைத்தீவு,

பி.சார்ளிங் (வயது 39) வவுனியா, சாள்ஸ் மத்திஸ் (வயது 63) முல்லைத்தீவு, நாகரத்தினம் (வயது 55), கே.விவேகானந்தராஜ் (வயது 66) யாழ்ப்பாணம், பி.கேதீஸ்வரன் (வயது 43) முல்லைத்தீவு, பி.யோகபாக்கியம் (வயது 56) புளியங்குளம், மங்களாதேவி (வயது 60) கிளிநொச்சி,

எம்.மகேஸ்வரி (வயது 61) புங்குடுதீவு, புஸ்கி (வயது 6) கிளிநொச்சி, ஏ.ரஜனி (வயது 36) கிளிநொச்சி, அகஸ்ரின் (வயது 4) கிளிநொச்சி, பி.சரஸ்வதி (வயது 53) முல்லைத்தீவு, எஸ்.மைக்கல் (வயது 72) கிளிநொச்சி, ரி.ராஜ்குமார் (வயது 19) கிளிநொச்சி, பி.புண்ணியமூர்த்தி (வயது 60) புளியங்குளம்,

எஸ்.சீதனம் (வயது 54) கிளிநொச்சி, பி.யோகரட்னம் (வயது 55) நல்லூர், கமலவதி (வயது 42) புதுக்குடியிருப்பு, காஞ்சனன் (வயது 65) பூநகரி, ரி.தேவசகாயம் (வயது 67) மன்னார், டி.ரீற்றம்மா (வயது 63) மன்னார், கரியம்மா (வயது 80) கனகராயன்குளம், எஸ்.சுப்பிரமணியம் (வயது 63) கனகராயன் குளம்,

எஸ்.கமலாதேவி (வயது 71) முல்லைத்தீவு, கே.பாலசுப்பிரமணியம் (வயது 63) கிளிநொச்சி, ஜி.புனிதவள்ளி (வயது 59) கிளிநொச்சி, பேபிதருண் (3 மாதம்) முல்லைத்தீவு, ஜே.பத்மினி (வயது 39) முல்லைத்தீவு, டனுசியா (1 1/2 வயது), முல்லைத்தீவு, சபாரத்தினம் (வயது 52) முல்லைத்தீவு,

டி.பரமேஸ்வரி (வயது 60) முல்லைத்தீவு, ஜி.துஸாந்தி (வயது19) முல்லைத்தீவு, எஸ்.நவமணி (வயது 47) கிளிநொச்சி, எஸ்.திலங்கராஜ் (வயது 72) மன்னார், ரவீந்திரன் (வயது 48) மன்னார், பி.பாக்கியலட்சுமி (வயது 75) கிளிநொச்சி, வை. உஷாநந்தி (வயது 35) கிளிநொச்சி,

பி.வரதராணி (வயது 50) கிளிநொச்சி, பி.கணபதிப்பிள்ளை (வயது 65) கிளிநொச்சி, ஹிலாண் ஜெய்சி (வயது 49) மன்னார், பி.ஞானப்பிரகாசம் (வயது 69) கிளிநொச்சி, கணபதிப்பிள்ளை (வயது 64) முல்லைத்தீவு, எஸ்.மஞ்சுளன் (வயது 14), கே.சிவலிங்கம் (வயது 70) முள்ளியவளை,

எஸ்.வெய்கர்னை (வயது 80) கிளிநொச்சி, எம்.சிவகுடும்போ (வயது 77) முல்லைத்தீவு, யு.மகாமாந்தன் (வயது 43) வட்டக்கச்சி, புவனேஸ்வரி (வயது 72) யாழ்ப்பாணம், எஸ்.ராஜேஸ்வரி (வயது 72) காகிதவெளி, டி.மாலினி (வயது 26) யாழ்ப்பாணம், ரி.சாந்தினி (வயது 40) முருதகர்ணி, கே.பொன்னம்பலம் (வயது 55) கிளிநொச்சி,

ஏ.நடராஜ் (வயது 80) கிளிநொச்சி, என்.யோகேஸ்வரன் (வயது 35) கிளிநொச்சி, கே.நாகலிங்கம் (வயது 84) கிளிநொச்சி, கே.பிரான்ஸிஸ் (வயது 69) முல்லைத்தீவு, பி.மதனராஜ் (வயது 31) கிளிநொச்சி, கே.விலவதி (வய்து 51) கிளிநொச்சி, ஆர்.பி.ரங்கம் (வயது 47) அளவெட்டி,

கனிகா (8 மாதம்) முல்லைத்தீவு, மேனுகா (வயது 7) முல்லைத்தீவு, கி.கமலா (வயது 32) முல்லைத்தீவு, சத்தியம்குமாரி (வயது 54) கிளிநொச்சி, ஜெதுஅம்மா (வயது 80) கிளிநொச்சி, குமரன், குமரன் (வயது 8) முல்லைத்தீவு, பிறிஸிலியா (வயது 73) மாத்தளன்,

ரி.நாகேஸ்வரி (வயது 63) வட்டக்கச்சி, றோபோட் (வயது 12) முல்லைத்தீவு, ஆர்.விவேகாந்தராஜா (வயது 46) வவுனியா, எம்.தர்சினி (வயது7) கிளிநொச்சி, பரஞ்சோதி (வயது 43) கிளிநொச்சி, எஸ்.பாத்திமா (வயது 61) உடையார்கட்டு, ஆர்.லக்சுமி (வயது 68) இராமநாதபுரம், ஜே.கணேஷ் (வயது70) கிளிநொச்சி, எஸ்.தவம் (வயது 32) பல்லவராயன்கட்டு,

சங்கேஸ்வரி (வயது 24) யாழ்ப்பாணம், அலாகிதன் (வயது 1 1/2) யாழ்ப்பாணம், எஸ்.ரஞ்சினி (வயது32) மாங்குளம், கபிதன்(24நாள்) மாங்குளம், ஏ.அந்தோனிப்பிள்ளை (வயது 74) கிளிநொச்சி, ஏ.தவராசா (வயது 53) யோகபுரம், ஆர்.கந்தையா (வயது 75) இராமநாதபுரம், செந்தூரம் (வயது 21) கிளிநொச்சி,

கே.மங்களேஸ்வரி (வயது57) யோகபுரம், என்.குருகுலசிங்கம் (வயது61) ஒட்டுசுட்டான், கே.விக்னேஸ்வரராஜா (வயது 36) உடையார்கட்டு, எஸ்.ராஜேஸ்வரி (வயது62) யாழ்ப்பாணம், பத்மலோஜினி (வயது60) கிளிநொச்சி, அப்பாத்துரை (வயது 66) முல்லைத்தீவு, பேபிகமலா (வயது 61) வவுனிக்குளம், பி.நந்தகுமார் (வயது 46) முல்லைத்தீவு, ஜே.சாருஜன் (வயது 1) கிளிநொச்சி, ஜெயானி (வயது25) கிளிநொச்சி, முருகேசு (வயது42) யாழ்ப்பாணம், ரி.தயானந்தன் (வயது 55) யாழ்ப்பாணம், செல்வநாயகமூர்த்தி (வயது60) யாழ்ப்பாணம், கமலாதேவி (71) முல்லைத்தீவு, பி.ஆறுமுகம் (வயது 74) முல்லைத்தீவு, எஸ்.செபஸ்ரின் (வயது 66) உடையார்கட்டு,

எஸ்.ஆறுமுகம் (வயது 64) கிளிநொச்சி, என்.நாகேஸ்வரி (வயது 60) முல்லைத்தீவு, டிசாந்தினி (41 நாள்) கிளிநொச்சி, டிலக்சினி (41 நாள்) கிளிநொச்சி, வி.தலுக்ஷி (வயது 3) கிளிநொச்சி, வி.சுஷிதன் (வயது 2) கிளிநொச்சி, வி.செல்வமலர் (வயது 47) கிளிநொச்சி, ரி.ரதிக்கா (வயது 30) யாழ்ப்பாணம், ரி.கஜனன் (வயது 2) யாழ்ப்பாணம், ஆர்.கண்மணி (வயது 50) கிளிநொச்சி, ரி.மகேஸ்வரி (வயது 57) யாழ்ப்பாணம்,

கே.பரமேஸ்வரி (வயது 50) யாழ்ப்பாணம், எஸ்.தனபாலசிங்கம் (வயது 59) கிளிநொச்சி, என்.சுபாஜினி (வயது 29) கிளிநொச்சி, என்.மாலினி (வயது 58) கிளிநொச்சி, மரியாளி (வயது 75) முல்லைத்தீவு, கமலாம்பிகை (வயது 80) முல்லைத்தீவு, தேவராசா (வயது 44) முல்லைத்தீவு, என்.ரூபா (வயது 33) முல்லைத்தீவு, ஏ.கர்சினி (10 மாதம்) முல்லைத்தீவு, மேகலா (வயது 8) கிளிநொச்சி, ஜெகப்பிரியா (வயது 10) கிளிநொச்சி, எஸ்.சுமித்திராதேவி (வயது 42) கிளிநொச்சி, கே.கணேஷ் (வயது 69) முல்லைத்தீவு, ஜி.குணமணி (வயது 65) கிளிநொச்சி, இ.செபஸ்ரின் (வயது 51)ஒட்டுசுட்டான், எஸ்.எம்.செபஸ்ரின் (வயது 53) முல்லைத்தீவு, சரஸ்வதி (வயது 41) யாழ்ப்பாணம், ஜே.சதலஷ்மன் (வயது 39) முல்லைத்தீவு, ஐ.சந்திரகுமார் (வயது 9) முல்லைத்தீவு, வி.ரகுநாதன் (வயது 65) வவுனியா, ஆர்.சித்திராமணி (வயது 59)கிளிநொச்சி, கே.சின்னத்தம்பி (வயது 74) யாழ்ப்பாணம், டி.சாளித் (வயது 44) பாலமடு, கலைச்செல்வி (வயது 32) கிளிநொச்சி, எஸ்.லக்ஷிகன் (வயது 4), திவ்வியா (வய்து 4)கிளிநொச்சி, எம்.ஜெயாணந்தன் (வயது 38) கிளிநொச்சி, எம்.சண்முகநாதன் (வயது 44) மல்லாவி, ஆர்.நடராஜா (வயது 64) முள்ளியவளை, எம்.எஸ்.ஆர்.சசிநந்தினி (வயது 72) முல்லைத்தீவு, முகாஜி (வயது 67) இ.பாக்கியம் (வயது 67) வட்டக்கச்சி, குணப்பிரகாசம் (வயது 75) புதுக்குடியிருப்பு , எஸ்.செல்லம்மா (வயது 80) கிளிநொச்சி, எஸ்.மாணிக்கம் (வயது 60) கிளிநொச்சி, கே.புஸ்பராணி (வயது 29) முல்லைத்தீவு,

எம்.பஞ்சலிங்கம் (57)மன்னார், பிதாரணி (12)மன்னார், ஜி.கிருஷ்ணா (வயது 75)கிளிநொச்சி ,எஸ்.ஜசோதா(வயது42) கிளிநொச்சி, ஆர்.கோசலவன்(வயது35) ஒட்டிசுட்டான், எஸ்.ரதிமலர்(வயது 67) கிளிநொச்சி, ஈஸ்வரி(வயது 70) கிளிநொச்சி, கே.கமலாம்பிகை(வயது63) கிளிநொச்சி, பி.ஜீவன் (வயது 12) முல்லைத்தீவு

சரசதேவி (வயது 47) முல்லைத்தீவு, கே.லக்சுமி (வயது 68) கிளிநொச்சி, தனவதி (வயது 60) முல்லைத்தீவு, வி.தர்மலிங்கம் (வயது 17) முல்லைத்தீவு, எம்.துஷாந்தன் (வயது 14) யாழ்ப்பாணம், வி.தர்மலிங்கம் (வயது 62) கிளிநொச்சி, எஸ்.புஸ்பகலா (வயது 29) பூநகரி,

தமிழரசன்(வயது1) பூநகரி, ஏ.சிவராஜசிங்கம் (வயது 65) கிளிநொச்சி ,எம்.நிஷாந்தன் (வயது 39) யாழ்ப்பாணம், துஷாரா (வயது 14) யாழ்ப்பாணம், பி.பத்மநாதன் (வயது 62) கிளிநொச்சி, புகழரசன் (வயது01) யாழ்ப்பாணம், டி.குமரதாஷன்(வயது 45) கிளிநொச்சி, ஜி.வாசுகி (வயது 44) யாழ்ப்பாணம்,

எஸ்.குணரேசன் (வயது 42) யாழ்ப்பாணம் ,சந்திரவதி(வயது 38) கிளிநொச்சி, கீதப்பிரியா (வயது 04) கிளிநொச்சி,எஸ்.சிவகாந்தன்(வயது 16) கிளிநொச்சி ,எஸ்.பார்வதி (வயது 60) கிளிநொச்சி ,கே.செல்லம்மா (வயது 85) யாழ்ப்பாணம், ஈ.அன்னமலர் (வயது 64) கிளிநொச்சி, ஏ.வெள்ளை (வயது 80) மன்னார்,

என்.நளினி (வயது 30) முல்லைத்தீவு, என்.சந்திரா(வயது 60) முல்லைத்தீவு, ஆர்.இராஜேஸ்வரி(வயது 50) புதுக்குடியிருப்பு, ஜேதுஷா (வயது 01) முல்லைத்தீவு, ஜதுஷா (வயது 03) யாழ்ப்பாணம். வை.யோகேஸ்வரி (வயது 31) யாழ்ப்பாணம், எஸ்.நவரத்தினம் (வயது 52) வவுனியா,

எம்.சுதன் (வயது 27) வவுனியா,மங்களேஸ்வரி (வயது 40) கிளிநொச்சி ,எஸ்.நகுலேஸ்வரி(வயது 31) கிளிநொச்சி ,இரோசனா (வயது 02) முல்லைத்தீவு ,எஸ்.நிரோஷன் (வயது 06) முல்லைத்தீவு ,எம்.விமலாதேவி (வயது 57) வவுனியா ,சின்னத்தம்பி (வயது 84) முல்லைத்தீவு,

ஏ.புஸ்பவதி (வயது 74) யாழ்ப்பாணம், கே.சோமசுந்தரம் (வயது 65) முல்லைத்தீவு, நிம்றொத் (வயது 08) புதுக்குடியிருப்பு,திகரா (வயது 06) புதுக்குடியிருப்பு,சந்திரகிரி (வயது 28) புதுக்குடியிருப்பு ,என்.யோகமலர் (வயது 60) முல்லைத்தீவு,

வி.பிள்ளை (வயது 62) முறிகண்டி, எம்.சிறிதரன் (வயது 41) முறிகண்டி, எஸ்.சேனகன் (வயது01) முறிகண்டி, அருகுணசீலன் (வயது 35) முல்லைத்தீவு,சுசிதரன்(வயது 13) முல்லைத்தீவு,இராஜேந்திரலிங்கம் (வயது 55) கிளிநொச்சி,ரி.சரவணமுத்து (வயது69) மன்னார்,

எஸ்.மனோன்மணி (வயது 61) மன்னார், பி.அருள்தாஸ்(வயது 13) முல்லைத்தீவு, எம்.தங்கம்மா(வயது 17) முல்லைத்தீவு, எம்.அழகம்மா (வயது47) முல்லைத்தீவு, எஸ்.மோடீசன் (வயது10) முல்லைத்தீவு, விதுஷா (வயது08);

அருள்நாதன் (வயது 85) முல்லைத்தீவு, வி.தனுஷா (வயது 02), வி.தர்மலக்சுமி (வயது 65) முல்லைத்தீவு,வாசுகி (வயது 44) கிளிநொச்சி,ஏ.இராமசாமி(வயது64) கிளிநொச்சி,கே.பூச்சோலை (வயது56) முல்லைத்தீவு, புஷ்பராணி (வயது 57) முல்லைத்தீவு,வை.அபிநயா(வயது08) கிளிநொச்சி, எம்.சாந்தகுமாரி (வயது34) கிளிநொச்சி,

எம்.சத்தியா (வயது 1) கிளிநொச்சி,ஏ.மகேஸ்வரி (வயது 72) முல்லைத்தீவு,வை.ஜமுனாஜினி (வயது 30) கிளிநொச்சி, ஆர்.யோகம்மா (வயது60) யாழ்ப்பாணம், எஸ்.சரஸ்வதி (வயது 57) முல்லைத்தீவு ஆர்.கிருஷ்ணசாமி (வயது 68) முல்லைத்தீவு,ஜே.ஜேமிஸ் (வயது 82) கிளிநொச்சி,எஸ்.சுனிதா (வயது 29) கிளிநொச்சி, எஸ்.கோபிதா (வயது 10) கிளிநொச்சி, எஸ்.மகாலக்ஸ்மி (52) யாழ்ப்பாணம், டர்ஷன் (வயது 10) மன்னார், ரேணுகா (வயது 42) கிளிநொச்சி,மலர் (வயது 2) கிளிநொச்சி, கலாஜோதி (வயது 39) மன்னார், அபிஷேக் (வயது 1 1/2) மன்னார்,எஸ்.அந்தோனிராஜ் (வயது 79) யோகபுரம்,சோதி (வயது 60) மட்டுவில்,கே.மார்க்கண்டன் (வயது 66) முல்லைத்தீவு, வள்ளிப்பிள்ளை (வயது 61) பொக்கணை, கஜேந்தினி (வயது 21) தர்மபுரம்,ஜே.ராசமேரி (வயது 78) திருநகர், கிளிநொச்சி, சுகீத்ரா (வயது 26) யோகபுரம், மலரினியன் (வயது 1 1/2) யோகபுரம், ஏ.தர்சினி (வயது 29) முல்லைத்தீவு, ஏ.அன்ரன் (வயது2) முல்லைத்தீவு, அருள்ஞானகுஞ்சி (வயது 33) முல்லைத்தீவு, அபிநயா (வயது 7 மாதம்) முல்லைத்தீவு, அபிஷா (வயது 2) முல்லைத்தீவு, அருண் (வயது 8) முல்லைத்தீவு,எமில்டா (வயது 7 மாதம்) முல்லைத்தீவு,பி.செல்வநாயகம் (வயது 29) அடம்பன்,எஸ்.செல்லன் கதிர்காமர் (வயது 49) யோகபுரம், எம்.கௌசா (வயது 28) முல்லைத்தீவு, கிருத்திகா (வயது 2) முல்லைத்தீவு,சரத்மபை (வயது 63) யாழ்ப்பாணம், எம்.இராசம்மா (வயது 80) முல்லைத்தீவு, எஸ்.டுலுக்ஷன் (வயது 13) மானிப்பாய்,

*12 ஆம் பக்கம் பார்க்க*

# இன்று ஒரு தகவல்

## வாழ்க்கை ஒரு விளையாட்டு!

வயதான குரு ஒருவர் தனது கடைசிக் காலத்தில் நண்பர்களையெல்லாம் அழைத்து, "நண்பர்களே... நான் வித்தியாசமான முறையில் சாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதற்கு ஏதாவது யோசனை சொல்லுங்கள்" என்று கேட்டார்.

நண்பர்கள் சிரித்தார்கள். "என்ன பேசுகிறீர்கள்? சாகிறது என்பது விளையாட்டுக் காரியமா?" என்று கேட்டார்கள்.

அந்தத் துறவி சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு பின்னர், "இதுவரைக்கும் யாராவது நடந்து கொண்டே இறந்திருக்கிறார்களா?" என்றார்.

"அப்படியும் ஒருவர் இறந்திருப்பதாக ஒரு கதையில் படித்திருக்கிறேன். ஒரு ஞானியால் தான் அப்படியெல்லாம் செய்ய முடியும்" என்றார் ஒருவர்.

"சரி... அப்படியானால் அந்த முறை நமக்கு வேண்டாம். நின்று கொண்டே யாராவது உயிரை விட்டிருக்கிறார்களா?" என்று கேட்டார் துறவி.

"அப்படியும் ஒருவர் இறந்திருக்கிறார்" என்றார் ஒருவர்.

துறவி மீண்டும் யோசித்தார்.

"மனிதன் எப்படி வாழ்கிறானோ அப்படி இறப்பது தான் நல்லது. சரி... தலைகீழாக யோகம் செய்யும் நிலையில் யாராவது இறந்திருக்கிறார்களா?" என்று கேட்டார். நண்பர்கள் சிரித்தார்கள்.

"தலைகீழாக நின்று இறந்ததாக நாங்கள் கேள்விப்பட்டதேயில்லை. அது முடியாத காரியம்" என்றார்கள்.

அந்தத் துறவி திடீரென உற்சாகமாக எழுந்து தலை கீழாக நின்றார். உயிரை விட்டார்.

அவ்வளவு தான். மடாலயத்தில் ஒரே குழப்பம். எப்படி அவரை கீழே இறக்கி படுக்க வைப்பது என்று புரியவில்லை. இப்படி உயிர் விடுவதைப் பற்றி அவர்கள் இதுவரைக்கும் கேள்விப்பட்டதும் இல்லை.

உண்மையிலேயே இறந்து போனாரா என்றும் தெரியவில்லை. சோதித்துப் பார்த்தார்கள். இதயத்துடிப்பு – நாடித்துடிப்பெல்லாம் நின்று போயிருந்தது.

என்ன செய்வதென்று எல்லோரும் குழம்பிக் கொண் டிருந்த சமயத்தில் ஒரு பெரியவர் யோசனை சொன்னார்.

"இந்தத் துறவியின் மூத்த சகோதரி பக்கத்திலுள்ள மடாலயத்தில் இருக்கிறார். அவரை இங்கு அழைத்துக் கொண்டு வந்தால் ஏதாவது வழிகிடைக்கும்" என்றார்.

அந்த அம்மாவுக்கு 90 வயது. அழைத்துக் கொண்டு வந்தார்கள். தடியூன்றி நடந்து வந்தார். தம்பி தலை கீழாக நின்று உயிர் விட்டிருப்பதைப் பார்த்தார். தன் கைத் தடியால் தம்பியின் உடலை ஒரு தட்டு தட்டிவிட்டு, "சாகும் போது கூட உன் குறும்புத்தனத்தை விடவில்லையா? இப்படியா சாகிறதா? ஒழுங்காகச் செத்துத் தொலை!" என்றார்.

அவ்வளவுதான். உடனே அந்தத் துறவி திரும்பி நேராக நின்றார். "அக்கா! கோபப்படாதே! நான் ஒழுங்காக சாகிறேன். எப்படிச் செத்தால் என்ன? எனக்கு எல்லாமே ஒன்று தான்" என்று சொல்லி விட்டு தரையில் படுத்து உயிரை விட்டார்.

அதன் பின் அந்த அம்மா கோலை எடுத்துக் கொண்டு திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்விட்டார்.

மரணத்தை ஒரு விளையாட்டாக ஆக்கிய அந்தத் துறவிக்கு வாழ்க்கையே ஒரு விளையாட்டாகத்தான் இருந்திருக்கிறது.

எந்த நோக்கமும் இல்லாமல் செயல்படுவது என்றால் என்ன என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. பயனை எதிர்பாராமல் பணி செய்து வாழ்ந்த மகான் அவர்.

தம்முடைய தொழிலை விளையாட்டாக செய்யத் தெரிந்தவருக்கு வாழ்க்கையே ஒரு விளையாட்டாக மாறிவிடும். எல்லாம் விளையாட்டாகி விடும் போது மரணமும் விளையாட்டாகி விடும்.

ஆனால் அதற்கு முன்னர் உங்களுக்குள் இருக்கும் உண்மையான நடிகனை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். நீங்கள் நடிக்க வேண்டியதேயில்லை. ஏற்கனவே நடித்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள்.

நீங்கள் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் ஓஷோ.

நீங்கள் வீதியில் நடந்து போய்க் கொண்டிருக்கிறீர்கள். எதிரில் வருபவர் உங்களைப் பார்த்து...

"எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்.

"நல்லா இருக்கிறேன்" என்கிறீர்கள். உண்மையிலேயே நாம் நல்லா இருக்க மாட்டோம். ஆனால் அப்படிச் சொல்வோம். அது நடிப்புத்தானே!

"உங்களைச் சந்தித்ததில் ரொம்ப மகிழ்ச்சி" என்கிறோம். உடனே கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள். உண்மையிலேயே உங்களுடைய மனம் மகிழ்ச்சியடைகிறதா? அது நடிப்புத்தானே!

வாழ்க்கையை சரியாகப் புரிந்து கொண்டால் எல்லாமே நடிப்பென்பதும் புரியும்!

"கல்யாணப் பத்திரிகை அனுப்பியிருந்தேனே, ஏன்டா வரவில்லை?" என்று கேட்டான் ஒருவன்.

"வந்திருந்தேனே!" என்றான் இவன்.

"டேய்... ஏன்டா பொய் சொல்கிறாய்... நான் பத்திரிகையே உனக்கு அனுப்பவில்லையே!" என்றான் அவன்.

அதற்கு இவன், "பத்திரிகை அனுப்பினேன் என்று நீ பொய் சொல்லும்போது கல்யாணத்திற்கு வந்தேன் என்று நான் பொய் சொல்லக்கூடாதா?" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாடு முழுவதும் 2,800 தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப ஆய்வு கூடங்கள் நிறுவப்படவுள்ளன

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில் நுட்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையால், இவ்வாண்டில் சகல வசதிகளும் கொண்ட இரண்டாயிரத்து 800 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்கள் நாடு பூராகவும் நிறுவப்படவுள்ளன என கல்லி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இன்டெக் கணனி தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன் பாடசாலை மாணவர்களின் தகவல் தொழில் நுட்ப அறிவை விருத்தி செய்யும் முகமாக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வகுப்பறை மடிக் கணனி வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இவ்வாண்டானது ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில் நுட்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையொட்டி, கல்வி அமைச்சு தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் கிராமப் புற மற்றும் நகர்ப்புற பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆங்கில மொழித்திறனை விருத்தி செய்வதற்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

இதனடிப்படையில் இரண்டு ஆயிரத்து 800 தகவல் தொழில் நுட்ப ஆய்வுகூடங்கள் நிறுவப்படவுள்ளன. இவ்வாய்வு கூடங்கள் சகல வசதிகளும் கொண்டதாக அமையப்பெறும்.

அத்துடன், பாடசாலை வலைப்பின்னல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஆயிரத்து 700 பாடசாலைகள் வலைப்பின்னல் படுத்தப்பட்டு, அவற்றின் மூலம் கல்வி தொடர்பான இணையத் தளங்களுக்குள் பிரவேசிக்க 3 மில்லியனுக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றுடன், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு ஒரு மில்லியன் மின் – அஞ்சல் கணக்குகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதோடு, 50 ஆயிரம் ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கற்கைகளுக்கான புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இவற்றிற்கு மேலாக கிராம நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கிராமிய சமுதாயத்திற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை வழங்கவும் சகாய விலையில் ஆசிரியர்களுக்கு கணனிகளை வழங்கவும் கிராமப் புறங்களில் நிறுவப் படும் ஆயிரத்து 500 கிராமிய கணனி கற்கை நிலையங்களினூடாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சியை வழங்கவும் 150 கணனி கற்கை நிலையங்களில் தொலைக் கல்வி மூலம் உயர் கற்கை நெறிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தவும். 600 பாடசாலைகளுக்கான இணையத்தள முகவரிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் 6 மாதங்களுக்குள் ஒரு இலட்சம் ஆசிரியர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பயிற்சியை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

## இடம்பெயர்ந்த மக்களின் விபரம் திரட்டல்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினர் தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சுடன் இணைந்து, இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மக்களின் விபரங்களை திரட்டவுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராமமட்ட பிரதி நிதிகளுக்கான இருநாள் பயிற்சி வகுப்புக்கள் அண்மையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. (ஓ-29)

## இராசி பலன்

26.02.2009

(மாசி 14, வியாழக்கிழமை)

பிரதமை முற்பகல் 8.04 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 10.14 மணிவரை

இராகுகாலம் 1.59 - 3.29 மணிவரை

சுபநேரம் 7.59-9.29 மணிவரை

ஊரெழுப் பிள்ளையார் கொடி

| | |
|---|---|
| மேடம் | அதிகாரிகள் பாராட்டு, எடுத்த காரியம் கைகூடும், பிரயாண நன்மை, ஆரோக்கியம். |
| இடபம் | நிலைமாற்றம், இனிய செய்தி, அதிகாரம், செய்தொழில் விருத்தி. |
| மிதுனம் | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, ரோகபயம், முயற்சி தாமதம். |
| கடகம் | சரீர பீடை, திடீர் நன்மை, மரியாதைக்குறைவு, போசன சுகம். |
| சிங்கம் | தேக சௌக்கியம், கீர்த்தி, தன லாபம், குடும்ப மகிழ்ச்சி |
| கன்னி | மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி, உடல் நலம். |
| துலாம் | சிறுவியாதி, புத்திரரால் மனஸ்தாபம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | வேலையில் ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு, காரிய தாமதம், சுபசெலவு. |
| தனுசு | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, முயற்சி கைகூடும், தன்னம்பிக்கை. |
| மகரம் | போசன சுகக்குறைவு, முயற்சி தாமதம், தனவிரயம், பெரியோர் மனஸ்தாபம். |
| கும்பம் | வெகுமானம், தொழில் சிந்தை, சயன சுகம், மாதர் நட்பு. |
| மீனம் | சோம்பல் நிலை, சிந்தனை மிகுதி, காரிய தாமதம், தன விரயம். |

வளவன்

# இலங்கை அதிபர் சேவை 2-IIக்கு 119 பேர் புதிதாக நியமனம்

(கொழும்பு)

இலங்கை அதிபர்சேவை தரம் 3- III இல் இருந்து 2 -II க்கு புதிதாக 119 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக தொழிற் சங்கங்களிடமிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் கருத்திற் கொள்ளப்பட்டு திறமை, மூப்பு அடிப்படையில் பாடசாலைகளில் தரம் 3-III அதிபர்களாக கடமையாற்றி வந்த 119 பேருக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 2-II க்கான நியமனம் கடந்த வாரம் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவினால் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பிரதேங்களிலுமுள்ள பாடசாலைகளில் தரம் 3-III இல் பணி புரிந்தோர் இந் நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அத்தோடு, இந்நியமனம் வழங்கப்படாது எஞ்சியுள்ளவர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் கொடுபட வேண்டிய இந்நியமனம் தற்போது வழங்கப்பட்டுள்ளதானது நியமனம் கிடைக்கப் பெறாது இதுவரை காலமும் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்த இத்தகைய அதிபர்களுக்கு ஓரளவேனும் நிம்மதியை வழங்கியுள்ளதாக ஒரு சில கல்வியாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ஓ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 90-110 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | -- |
| கோவா | 40 | 40 |
| கரட் | 40 | 40 |
| பூசணி | 20 | 50 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 30 | 25-30 |
| பெரிய வெங்காயம் | 60 | 50-60 |
| பாகற்காய் | 50 | 40 |
| வெண்டிக்காய் | 25 | 30 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 40 | 40 |
| லீக்ஸ் | 120 | 100 |
| போஞ்சி | 10-15 | 20 |
| கீரை - 1 பிடி | 10-15 | 10-15 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 |

# 103-வது வடக்கின் பெரும் போர்
# யாழ்.மத்திய கல்லூரியில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

"வடக்கின் பெரும் போர்" (Battle of the North)என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 103ஆவது 3 நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்ப விழாவுடன் ஆரம்பமாகும் இப்போட்டி 3 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

இப்பெரும் போருக்கு யாழ். மத்திய கல்லூரி அணிக்கு கே.செல்ரனும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு வி.பிரணவனும் தலைமை வகிக்கின்றனர்.

இரு கல்லூரிகளுக்கும் இடையிலான வடக்கின் பெரும் போர் 1904 ஆம் ஆண்டு ஆரம்பமாகியுள்ள போதும் இன்று ஆரம்பமாவது 103ஆவது போட்டியாகும்.

போர்கால சூழ்நிலையால் சில ஆண்டுகள் போட்டி நடைபெறவில்லை.

இன்று ஆரம்பமாகும் 103ஆவது வடக்கின் பெரும் போர் விறுவிறுப்பானதாக அமையும் என கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வகையில் பழமை வாய்ந்ததும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் சமராகவும் வடக்கில் பெரும் போர் கணிக்கப்படுகின்றது.

அத்துடன் வடக்கில் கல்லூரிகளுக்கிடையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் 3 நாட்களை கொண்ட ஒரேஒரே போட்டி இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.மத்திய கல்லூரிதான் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் பாடசாலை மட்ட கிரிக்கெட் ஆட்டத்தை ஆரம்பித்தது.

பின்னர் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியும் இணைந்து இவ்விரு கல்லூரிகளில் நட்புறவுப் பாலமாக இக் கிரிக்கெட் போட்டியை 103ஆவது ஆண்டாக ஒற்றுமையுடன் கல்லூரி சமூகங்கள் நடத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியை சிறப்புற நடத்துவதற்கு நாட்டின் சகல பாகங்களிலும் இருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்து இரு கல்லூரிகளின் பழைய மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்குவது வழமையான ஒரு நிகழ்வாகும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற 102 ஆவது கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 133 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வருடம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சினேக பூர்வ கிரிக்கெட் போட்டியில் கே.செல்ரன் தலைமையிலான யாழ். மத்திய கல்லூரி அணி 7 போட்டிகளில் விளையாடி சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி,தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி,யாழ்.சென் பற்றிக் கல்லூரி,சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய 5 அணிகளை வென்றுள்ளது.

அத்துடன் யாழ்.இந்துக்கல்லூரி அணியை முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றதுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிடம் முதல் இன்னிங்ஸில் பின்னிலை பெற்றபோதும் இரு ஆட்டங்களும் சம நிலையில் முடிபுற்றது.

இவ்வருடம் நடைபெற்ற 7 ஆட்டங்களில் அணித்தலைவர்கே.செல்ரன், என்.ஜெனோசன்,எஸ்.ஜேம்ஸ் ஜன்சன் ஆகியோர் சதம் பெற்ற வீரர்களாகவும் ஆர்.கோபிகன், உப அணித்தலைவர் எம்.ஸ்ரீபன்ராஜ் ஆகி யோர் அரைச்சதம் பெற்ற வீரர்களாக துடுப் பாட்டத்தில் பிரகாசமானவர்களாகத் திகழ்கின்றனர்.

யாழ். மத்திய கல்லூரியின் பந்து வீச்சு ஜாம்பவான்களாக ஆர்.கோபிகன்,எஸ்.தனுஜன் ஆகியோர் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியுள்ளதுடன் ஜோ.ரதீஸன்,அணித்தலைவர் கே.செல்ரன்,எஸ்.அலன்குமார்,ரி.தர்சன் மற்றும் உப அணித்தலைவர் எம்.ஸ்ரீபன்ராஜ் ஆகியோர் இன்னிங்ஸ் ஒன்றில் கூடுதலாக 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்களாகவுள்ளனர்.

அணியின் பயிற்றுவிப்பாளர் எஸ்.சுரேஷ் மோகனின் பயிற்றுவிப்பில் வீரர்கள் அனைவரும்சகலதுறையிலும்ஜொலிக்கவல்லவர்கள்.

இதேவேளை இவ்வருடம் யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற சினேகபூர்வ கிரிக்கெட் போட்டிகளில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 7 போட்டிகளில் விளையாடி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய 3 அணிகளை வென்றுள்ளது.

அத்துடன் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஆகிய 3 அணிகளுடனான போட்டியில் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றபோதும் ஆட்டம் சமநிலையானது.

அத்துடன் யாழ்.பல்கலைக்கழக அணியுடனான போட்டியில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களால் வென்றுள்ளது. சென் ஜோன் கல்லூரி அணியின் ஏ. விதுஷன் 4 அரைச்சதங்களையும், எம்.ஹரிபிரவீன் 4 அரைச்சதங்களையும், வி.ஹரிவதனன் ஒரு அரைச்சதத்தையும் அடித்து இப் பருவகாலத்து துடுப்பாட்டத்தில் ஜொலித்துள்ளனர்.

பந்துவீச்சில் இ.தவநீதன் 2 இன்னிங்ஸ்களில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் எம்.ஹரிபிரவீன், உப அணித்தலைவர் ஆர்.ரஜீபன் ஆகியோர் 4 இன்னிங்ஸ்களில் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி பந்துவீச்சில் அசத்தியுள்ளனர்.

பயிற்றுவிற்றுவிப்பாளர் வி.குமணனின் சிறப்பான வழிநடத்தலின் மூலம் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்கள் சகல துறையிலும் வல்லவர்களாததால் இன்றைய போட்டியில் மோதும் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சவாலாக விளையாடும் என்பதில் ஐயமில்லை.

## யாழ்.மத்திய கல்லூரி




'மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்'

**இருப்பவர்கள் (இ-வ)** எஸ்.சுரேஷ் மோகன் *(பயிற்றுவிப்பாளர்)*,வி.எஸ்.மகேந்திரன் *(விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்)*,கே.செல்ரன் *(அணித்தலைவர்)*,எல்.ஓங்கார மூர்த்தி *(அதிபர்)*,எம்.ஸ்டீபன்ராஜ் *(உபஅணித் தலைவர்)*, ரி.சிவாகரன்,இ.பிரபாகரன் *(பொறுப்பாசிரியர்)*.

**நிற்பவர்கள்-முதல்வரிசை (இ-வ)** ஜி.ஜெரிக்துஷன், ஜே.ரதீஸன்,எஸ்.ஜேம்ஸ் ஜன்ஸன், என்.லவநீதன், ஆர்.எட்வோட்எடின், எஸ்.அலன்குமார், ஆர்.கோபிகன், என்.ஜெனோசன், எஸ்.தனுஜன்.

**நிற்பவர்கள் இரண்டாவது வரிசை (இ-வ)** எம்.ஹரிஸ்,எம்.டர்ஷன்,வி.பில்ஷன், ரி.டெனிஷன், ரி.தர்ஷன்.

## யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி



'இருளில் ஒளி பிரகாசிக்கட்டும்'

**இருப்பவர்கள்: (இடமிருந்து வலம்)** வி.குமணன் *(பயிற்றுவிப்பாளர்)*, எம்.ஹரிபிர வீன்,வி.பிரணவன் *(அணித்தலைவர்)*, அதிவண.என்.ஜே.ஞானபொன்ராஜா *(அதிபர்)*, ஆர்.கஜீபன் *(உப அணித்தலைவர்)*, வி.எஸ்.பி.துஷிதரன், *(விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்)*.

**நிற்பவர்கள்-முதல்வரிசை (இ-வ)** எஸ். அலெக்ஸ்டீயோன், வி.ஹரிவதனன், கே.கஜரூபன், எஸ்.சஞ்சீவன், எஸ்.சவீதன், ரி.இவோன்சன், ஏ.விதுஷன்.

**நிற்பவர்கள் இரண்டாவது வரிசை (இ-வ)** ஜே.அட்ரிஜன், பி.ஜயந்தன், இ.தவநீதன், எஸ்.பிரியதர்சன், எஸ்.சுதாகரன், படத்திலுல் இல்லாத அணி வீரர் பி.விமல்ராஜ்.

## ஆட்ட நேரம் ஆரம்பம்

**காலை 9.00 மணி - நண்பகல் 12.00 மணி**

**மதிய போசனம் நண்பகல் 12.00 - பிற்பகல் 12.40 மணி**

**ஆட்டம் பிற்பகல் 12.40 மணி - பிற்பகல் 2.40 மணி**

**தேநீர் பிற்பகல் 2.40மணி - பிற்பகல் 3.00மணி**

**ஆட்டம் பிற்பகல் 3.00 மணி - மாலை 4.00 மணி**

### 102 போட்டிகளின் முடிபுகள் ஒரே பார்வையில்

*யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி -33*

*யாழ். மத்திய கல்லூரி வெற்றி -24*

*சமநிலை- 37*

*முடிபுகள் கிடைக்கப்பெறாதவை -07*

*கைவிடப்பட்டது-01*

## கற்பூரச் சட்டி திருடிய 6 சிறுவர்களை
# 100 மணிநேரம் சமூக சேவையில் ஈடுபட யாழ்ப்பாண நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் கற்பூரச்சட்டி திருடிய சிறுவர்கள் 6 பேரை 100 மணித்தியாலம் சமூக சேவையில் ஈடுபடுமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேற்படி 6 சிறுவர்களும் கடந்த வருடம் ஆகஸ்ட் 29ஆம் திகதி கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கற்பூரச் சட்டியை திருடியதாக ஆலய தர்மகர்த்தா சபையினால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பான சிறுவர்களை பொலிஸார் தேடியதையடுத்து அவர்கள் தலைமறைவாக இருந்தனர்.

இந்நிலையில் அவர்களை கைது செய்த பொலிஸார் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் நீதிவான் ஆர்.வ்சந்தசேனன் முன் நிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஆறு சந்தேகநபர்களும் 18 வயதுக்குட்பட்டவர்கள் என்பதால் அவர்களை 20 ஆயிரம் ரூபாய் சரீரப்பிணையிலும் 100 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுத்துமாறும் தீர்ப்பளித்து அவர்களை விடுதலை செய்தார்.

(ச-7)

# இலங்கையில் தமிழர் 81

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

அரிசில் போரில் தோல்வியுற்ற பாண்டியர் படை இதனைக் கேள்வியுற்று மதுரைக்கு விரைந்தது. மதுரையில் அப்படை நடத்திய போரில் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் உயிரிழந்தான். சிங்கள மன்னன் படை வரகுண பாண்டியனைப் புதிய பாண்டிய மன்னனாக முடி சூட்டியது. இது 862 இல் நடந்த நிகழ்ச்சியாகும்.

இவ்வாறு தமிழ் நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பேரரசு எழுச்சிபெற்ற காலங்களில் இலங்கையையும் பாதிப்பது தவிர்க்க முடியாதது என்பது வெளிப்படையாகின்றது. தவிர்க்க முடியாதவாறு இலங்கை தென்னிந்திய அரசியலில் சிக்கிக்கொண்டது. ஏழாம் நூற்றாண்டில் பல்லவர் எழுச்சியுடன் ஏற்பட்ட தொடர்பு இலங்கையைத் தென்னிந்தியப் பேரரசுகளுக்கிடையிலான போராட்டங்களில் பங்குகொள்ள வழிவகுத்தது.

முதலில் பல்லவரும் பாண்டியரும் மேலாதிக்கத்துக்காகப் போராடிய போது, சிங்கள மன்னர் பல்லவருக்குச் சார்பாக இருந்தனர். பின்னர் சோழப் பேரரசு எழுச்சி பெற, அதனால் பாதிக்கப்பட்ட பாண்டியருடனும் சேரருடனும் சிங்கள மன்னர் இணைந்து சோழரை எதிர்த்தனர். இந்த அரசியல் வளர்ச்சிகள் அனைத்தும் இலங்கையில் தமிழர் இனக் குழு வலுப்பெற இறுதியில் உதவின.

#### சமய அபிவிருத்திகள்
#### தேரவாத பௌத்தம்

தமிழ் நாட்டில் தேரவாத பௌத்தம் எழுச்சி பெற்றதன் விளைவாக அங்கு பாளி இலக்கியம் சிறப்புற்ற வளர்ந்தது.

இந்த வரலாறு இன்று மறக்கப்பட்ட ஒரு வரலாறாகிவிட்டது. நாலாம் நூற்றாண்டு தொடக்கம் ஆறாம் நூற்றாண்டின் இறுதி வரை, தமிழ்நாட்டில் இருந்த தேர வாத பௌத்த மையங்களில், சிறப்பாகக் காஞ்சி, மதுரை, காவிரிப் பட்டி ணம் மற்றும் உறையூர் ஆகிய நகரங்களில், அமைந்திருந்த பௌத்த பெரும் பள்ளிகளில் தலைசிறந்த பௌத்த அறிஞர்கள் பாளி மொழியில் பல நூல்களை இயற்றியும் உரை நூல்களை எழுதியும் பாளி இலக்கிய வளர்ச்சிக்கு உதவினர். கவலைக்குரிய வகையில் இப் படைப்புக்கள் தமிழ் நாட்டில் பேணப்பட வில்லை. பெரும்பாலும் இலங்கையிலேயே இவை பேணப்பட்டுள்ளன.

இக் காலப் பகுதியில் பௌத்தம் உலகில் மூன்று பெரும் அறிஞர்களாகக் கருதப்படும் புத்தகோசர், புத்ததத்தர் மற்றும் தம்மபாலர் ஆகியோர் தமிழ்நாட்டுப் பௌத்தப் பெரும் பள்ளிகளில் கடமையாற்றியவர்கள். இவர்களுள் இருவர், புத்ததத்தரும் தம்மபாலரும், தமிழ்ப் பௌத்த பிக்குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம் மூவருள் கூடிய பிரசித்தி பெற்ற அறிஞர் புத்த கோசர். ஆனால் அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி அதிக நம்பகமான தகவல்கள் இல்லை.

புத்த கோசர் இயற்றிய பாளி நூல்களுள் மிகவும் பிரபல்யமான இரு நூல்கள் அங்குத்தர நிகாய மற்றும் மஜ்ஜிம நிகாய ஆகியவற்றுக்கு அவர் எழுதிய உரை நூல்களாம். முதலாவது புத்தகோசர் காஞ்சியில் இருந்த காலத்தில் எழுதப்பட்டது.

மற்றது மயூரரூபபட்டன எனப் பாளியில் பெயர் பெறும் ஓர் இடத்தில் இருந்த பௌத்த பள்ளியில் அவர் வாழ்ந்தபோது எழுதப்பட்டது. இந்த இடம் மயிலாப்பூரில் குறிக்கும் என ஒரு கருத்து உண்டு.

புத்ததத்தர் சோழநாட்டில் பிறந்தவர்; ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; வயதால் புத்தகோசருக்கு மூத்தவர். பௌத்த குருவாக காவேரிப்பட்டினம், உறையூர், பூதமங்கலம், காஞ்சி மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களில் இருந்த பெரும் பள்ளிகளில் பல பதவிகளை வகித்தவர்.

அவர் எழுதிய பாளி நூல் களுள் மிகவும் பிரபலியமானவை விநய விநிச்சய, உத்தர விநிச்சய மற்றும் ஜினா லங்கார காவ்ய ஆகியவையாம். புத்ததத்தர் பெற்றுள்ள புகழுக்கு முக்கிய காரணம் அவர் எழுதிய உரை நூல்களே.

இவர் அனுராதபுரத்துக்குச் சென்று அங்கு பழைய சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த உரை நூல்கள் பலவற்றைப் பாளியில் பெயர்த்தும் புதிதாக உரை நூல்கள் பல பாளியில் எழுதியும் புகழ்பெற்றுள்ளார். அவற்றுள் முக்கியமானவை மதுரத்த விலாஸினி மற்றும் அபிதம்மாவதார ஆகியவை.

தம்பாலர் பற்றிய தகவல்கள் இலகுவில் பெறமுடியாதவை. பல பௌத்த அறிஞர்கள் தம்மபால என்ற பெயர் பெற்றிருந்த காரணத்தால் அவர்கள் பற்றிய செய்திகள் வேறுபடுத்த முடியாத வகையில் கலந்துவிட்டன. ஓர் உரையாசிரியராகப் புத்தகோசரைப் போன்று புகழ்பெற்றவர் தமிழ்நாட்டில் பதரதித்த(கடலூர்) என்னும் இடத்தில் இருந்த பௌத்த பள்ளியில் வசித்த தம்மபாலர். பல உரை நூல்களளை எழுதியவர். அவற்றுள் மிகப் பிரபல்லியம் பெற்ற நூல் பரமத்த தீபனீ என்பதாகும். நாகபட்டினத்தில் ஒரு பள்ளியில் வாழ்ந்த இன்னொரு தம்மபாலர் நெத்திபகரண என்ற நூலுக்கு உரை எழுதியவர்.

#### மஹாயான பௌத்தம்

இதுவரை குறிப்பிட்ட தமிழ்ப் பௌத்த அறிஞர்கள் அனைவரும் தேரவாத பௌத்தத்தைத் தழுவியவர்கள். அவர்கள் பெற்ற புகழ் காரணமாகத் தமிழ்நாட்டில் மேலோங்கிய பௌத்தப் பிரிவாகத் தேரவாதம் விளங்கியது என்ற கருத்துக்கு இடமுண்டு. ஆனால், இத் தேரவாத அறிஞர்களைப் போன்று சிறப்புப் பெற்ற பல மஹாயான பௌத்த அறிஞர்களும் இக் காலத்தில் தமிழ்நாட்டில் தோன்றினர். மஹாயானம் மட்டுமன்றி வேறும் பௌத்த மதப்பிரிவுகளும் தமிழ் நாட்டில் இருந்தன. காஞ்சி போன்ற நகரங்களில் இம் மதப் பிரிவுகளைச் சேர்ந்த பள்ளிகள் இருந்தன.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

ஆனாலும் இவை பற்றிய வரலாற்றுத் தகவல்கள் அதிகம் பேணப் படவில்லை. பள்ளிகளின் அழிபாடுகளும் மறைந்து போயின. பேணப்பட்டுள்ள சமஸ்கிருத மஹாயான நூல்கள் மூலமாகவும் சீன நூல்கள் வாயிலாகவும் ஒரு சில தகவல்களைப் பெறக் கூடியதாய் உள்ளது. (தொடரும்)

---

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் (1902-1915)
# கல்லடி வேலனும் 20

யாழ்ப்பாணத்தில் காலத்திற்குக் காலம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றவர்களும் வந்து தமது நிகழ்ச்சிகளைக் காட்டிப் பணம் சம்பாதித்துச் சென்றுள்ளனர். அந்த வகையில் 1907 இலும் வந்த சர்க்கஸ் கொம்பனியினர் வந்து வரவேற்பின்மை காரணமாக திரும்பிச் சென்றனர்.

இந்நிகழ்ச்சிகள் முற்றவெளியில் நடத்தப்பட்டிருந்தன என்ப தையும் அறிய முடிகிறது. இதுபற்றி க.வே. பின்வருமாறு எழுதியிருந்தார்.

*உவாறன் சர்க்கஸ் கொம்பனி*: இக் கம்பனியார் முன்போலென்றெண்ணி யாழ்ப்பாணம் வந்து முற்றவெளியில் இரண்டு மூன்று நாள் விளையாட்டு நடத்தியும் தக்க பலனின்மையால் திரும்பிப் போயினர். உணவுக்கு வழியற்றிருக்குமிக்காலத்திலும் நம் பணத்தை வாரிப் போக வந்தார்கள். அவ்வளவிற்றொலைந்தது சந்தோஷம். (சு.நா.11.03.1907)

இதேபோன்ற சர்க்கஸ் நிகழ்ச்சியொன்று 1911 ஆம் ஆண்டும் இடம்பெற்றது. முற்றவெளியில் நடந்த இந்தச் சர்க்கஸ் நிகழ்ச்சி தொடர்ந்து பல நாட்கள் நடைபெற்றது. இதனால் பெருமளவு பணம் அவர்களுக்கு வருவாயாகக் கிடைத்தது.

இதனைப் பொறுக்காத க.வே..., 'சறுக்கீசு ஆட்டமும், உறுப்பீசு ஓட்ட மும்' எனத் தலைப்பிட்டு எழுதிய பத்திரிகைக் கட்டுரையில், பணம் இவ்வாறு விரயமாகிற தெனவும், யாழ்ப்பாணத்தில் நிலவும் பணக் கஷ்டத்தின் மத்தியில் இது அவசியமற்றது எனவும் குறிப்பிட்டிருந்தார். (சு.நா. 20.03.1911)

இவை யாழ்ப்பாணத்தவரின் பணம், விரயமாக்கப்பட்டு வெளியே செல்லக் கூடாது ஏன்ற எண்ணத்தையும் உள்ளூரில் வேண்டிய விடயங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற ஆசிரியரின் விருப்பினையும் காட்டுவதாக அமைகிறது.

#### நாவாந்த சமய வாழ்வும் க.வே.யும் சுதேச நாட்டியம் பத்திரிகையும்

சுதேச நாட்டியம் பத்திரிகை சமயங்களைப் பொறுத்தவரையில் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்த அதேவேளையில் மக்களின் சமய வாழ்வு பற்றிய விடயங்களிலும் சர்ச்சைகளிலும், தமது கருத்தைப் பொதுநிலைப்பட நின்று கூறியிருந்தது. நல்லூர் கந்தசுவாமி கோயிலில் பலி யிடும் வழக்கம் பற்றிய கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டு, அது பின்னர் வழக்கு என்ற நிலைக்குச் சென்றபோது, சுதேச நாட்டி யத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

*மானநட்ட வழக்கு:* நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆடு வெட்டப்படும் கோவில் என்றும், அதினாலக் கோவிலைக் கும்பிடுவது தோஷமென்றும் அதிற் செய்யப்பட்ட கும்பாபிஷேகம் தவறென்றும், கும்பாபிஷேகத்தில் குருதெட்சணையாகப் பெற்ற தொகை என்ன என்றும் கனம் த .கைலாசபிள்ளை என்பவரால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு துண்டுப் பத்திரத்தை மறுத்துக் கோயிலதிகாரிகளோ யாரோ ஒரு கண்டனமெழுதி வெளிப்படுத்தினர்.

அக் கண்டனம் பரிகாச வசனங்களா லும்; அபவாதங்களாலும் மேற்படி கைலாச பிள்ளையைத் தாக்கியிருப்பதாயும், அப் பத்திரத்தைக் கோப்பாய் ஸ்ரீ வைரவநாதக் குருக்கள் பரப்பிவிட்டதாயும் அவ்வாறு பரப்பியதால் குருக்கள் தம்மை சங்கையீனஞ் செய்ய முயன்றாரென்றும் குருக்கள் மேற் பிள்ளை மானநட்ட வழக்கென்று தொடுத்தனர்... சட்டமுணர்ந்த விவேகிகளும் யோக்கியருமிருந்தால் வழக்கொன்று தொடுப் பது அருமையான காரியமல்ல... சாத்திரந் தெரிந்து பூசிப்பார் சிலர். தெரியாது பண்டை வழக்கத்தைக் கொண்டு பூசிப்பார் பலர்..." (சு.நா.29.09.1902)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிதாக ஆலயங்கள் நிர்மாணம் செய்வது பற்றி விசனத்துடன் '...ஊர் தோறும் கோடா கோடி கோயில்கள் திருபணிக்குறை உடையனவாயே இருக்க, மேலும் புதுக்கோயில்கள் கட்டுகிற இந்நாட்டுப் புண்ணிய புருஷர் விவேகம் உங்களிடத்தும் அடுத்ததா?' என ஆதங்கத்துடன் குறிப்பிட்டுள்ளார். (சு.நா. 12.09.1904)

#### முடிவுரை:

பத்திரிகை என்பது ஒரு வலுவான ஊடகம், ஐரோப்பிய, அமெரிக்க நாடு களில் பத்திரிகைச் சாதனம், ஏற்படுத்திய தாக்கம் அதிகம்.

பத்தொன்பதாம் நூற்றாண் டிலேயே ஐரோப்பாவிலும் பத்திரிகைகள் மேலோங்கும் நிலை ஏற்பட்டது. 1910 ஆம் ஆண்டளவிலேயே அங்கும், பத்திரிகை அதன் சகல லட்சணங்களையும் கொண்ட முழுமை நிலையை அடைந்தது.

பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் ஐரோப்பிய, அமெரிக்க மிஷனரிமார்களின் மத மாற்ற நடவடிக்கைகளின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட அச்சுக் கலையும், பத்திரிகைத்துறையும் மிக விரைவிலேயே, இப் பகுதிகளில் வளர்ச்சி பெறும் நிலை ஏற்பட்டது.

ஆரம்பத்தில் ஆங்கில, அல்லது ஆங்கில -தமிழ்ப் பத்திரிகைகள் மத நோக்கில் ஆரம்பிக்கப்பட்டாலும், சுதேச மொழி அல்லது பிரதேச மொழிப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைவதைக் காணமுடிகின்றது.

அந்த வகையில் சுதேச மொழிப் பத்திரிகைகளின் உருவாக்கமும் வளர்ச்சியும், இப் பகுதிகளில் வாழ்ந்த மக்கட் கூட்டத்தினரின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியில் அளப்பெரும் முக்கியத்துவம் கொண்டவையாக அமைந்திருந்தன.

எமது இன்றைய நிலையில் இப் பத்திரிகைகளின் உருவாக்கம் வளர்ச்சி பற்றிய அறிவு, அறிவுப்பெருக்கத்திற்கு உதவுவதாக உள்ளது. இதற்கும் மேலாக இக்கால கட்ட வரலாற்றை அறிய விரும்பும் ஒருவருக்கு, வரலாற்றை அறிய உதவும் கூடியளவு நம்பகத் தன்மை கொண்ட வரலாற்றாதார மாகவும் அமைகின்றது.

மேலைநாட்டு இராஜதந்திர அறிவு கொண்ட அரசஅலுவலர் களாலும் ஆய்வாளர்களாலும், எழுதப்பட்ட அறிக்கைகளிலும், நூல்களிலும் ,ஆங்கிலம் கற்ற உயர் வகுப்பினரால் எழுதப்பட்ட பத்திரிகைகளிலும் நூல்களிலும் கிடைக்கும் தகவல்களையும், தரவுகளையும் விடச் சிறந்த, நம்பகமான வரலாற்றுத் தகவல்களை இப் பத்திரிகைகள் வாயிலாகப் பெற முடிகிறது

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், பிரித்தானிய காலனித்துவம் சமயத்தின் வழிவிசுவாசமான பிரஜைகளைப் பெறலாம் என்ற கருத்தைக் கைவிட்டு, 'மக்களின் இயல்பான உணர்வுகளை வளரவிடுவதும், பொதுவான நல்லொழுக்கங்களைப் பின்பற்றச் செய்வதும் போதுமானது' என்ற எண்ணம் காணப்பட்டது.

அதன் வழி தாமாக வே தமக்கான தேவைகளையும், பாதையை யும் வகுத்துக்கொள்ளட்டும் என அனுமதித் தமையே சுதேசிகள் தத்தம் மொழி சார்ந்த பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு வாய்ப் பினை வழங்கியிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

இதனால் தான் சுதேச மொழிப் பத்திரிகைகள் வளர்ச்சிபெற முடிந்தது. இத்தகைய ஒரு காலகட்டத்தில் உதயம் பெற்ற 'சுதேச நாட்டியம்'பத்திரிகை அதன் பத்திராதிபரான கல்லடி வேலனின் தளராத மன உறுதியினாலும், பத்திரிகை ஊடகம் பற்றி அவர் பெற்றிருந்த விளக்கத்தின் அடிப்படையிலும், 45 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவரக் கூடியதாய் இருந்தது.

**திருமதி.சோ.கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

அவர் யாழ்ப்பாண சமூகத்திற்காக எழுதிய பத்திரிகைகளில் சில விடயங்கள் மாற வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டவராகவும், சில விடயங்களை மாற்றமடையாமல் வைத்திருக்க வேண்டும் என்பதில் கடும் போக்கினைக் கொண்டவராகவும் காணப்படுகின்றார்.

இது அவரதும், அவர் பத்திரி கையை ஆதரித்தவர்களினதும் மனப்பாங் கினைக் காட்டுவதாகவே கொள்ளலாம். இப் பத்திரிகை இருபதாம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் காணப்பட்ட யாழ்ப்பாணம் பற்றியும், யாழ்ப்பாண மக்கள் பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு தரவுகளைத் தருவதாயுள்ளது. (முற்றும்)

## இலட்சார்ச்சனை

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 3 மணிக்கு மஹாலட்சுமிக்கு விசேட பூஜையும் தீப பூஜையும் இடம் பெறும்.

அத்துடன் இத் தினங்களில் காலை 9 மணிக்கு அபிஷேக பூஜை, முற்பகல் 10.30 மணிக்கும், மாலை 3.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூஜை என்பன இடம்பெறும். (ஓ)

## வீதிகளை புனரமைப்பு செய்ய ஏற்பாடு

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட பல வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

நீண்ட காலமாக புனரமைப்பு செய் யப் படாதிருந்த ஆறு வீதிகளைப் புனரமைப்பு செய்வதற்கான ஏற்பாடுகளை செயலாளர் சி.வே.குலநாயகம் மேற்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் நாவலர்மடம் உச்சில் அம்மன் கோவில் வீதி, வீராவத்தை வீதி, அல்வாய் மனோகரா முன் வீதி, இராச சிங்களம் வீதி, கிளானை வீதி துன்னாலை ஏகட்டியா வீதி என்பன புனரமைப்பு செய்யப் படுவதோடு, உடுப்பிட்டி சந்தைக்கு சுவர் அமைத்தல், சைக்கிள் தரிப்பிடம் அமைத்தல் மற்றும் நெல்லியடி கடைத் தொகுதி புனரமைப்பு வேலைகளும் நடைபெறவுள்ளது. (ஓ-10)




## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம்'' மனித உரிமை மீறல்களும் வன்முறையால் பாதிக் கப்படும் பெண்களும்'' என்ற ஒருநாள் கருத்தரங்கினை இன்று வியாழக்கிழமை தாவடி தெற்கு, கொக்குவில் ஸ்ரீ காளி சன சமூக நிலைய மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

பல்வேறு சட்டவிதி முறைகள் எழுதப்பட்டிருந்த போதிலும் மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் தொடர்பான சட்டஒழுங்கு முறைகள் பற்றிய போதிய தகவல்கள் அறியப் படாமையும், போதிய விழிப்புணர்வு இல்லாமையுமே ஒரு காரணமாகும்.

ஆகவே இக் கருத்தரங்கு இந் நோக்கத்தை நிறைவுசெய்யும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கருத்தரகில் சட்டத்தரணி மு. றெமிடியஸ் வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி ஆர். நாகரூபினி, திருமதி பி.இராஜேஸ்வரன் ஆகியோர் வளவியலாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 174 ஆவது ஜெயந்தி விழா நிகழ்வுகள்

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 174 ஆவது ஜெயந்தி தின விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தாவடி சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பஜனை மற்றும் 'கதாதரா! உன்னைக் கலந்துறவாடும் காலம் வாராதா!' என்னும் விடயத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி செயலாளர் சி.சிவமோகனின் விசேட ஆன்மீக உரை ஆகியன இடம்பெறும். தொடர்ந்து தீபாராதனை பிரசாதம் வழங்கல் ஆகியனவும் இடம்பெறும்.

அத்துடன் மார்ச் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஜெயந்தி விழா நிகழ்வுகளை உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பித்து வைப்பார். விழாவின் ஏனைய நிகழ்வுகள் காலை 10 மணிக்கு தாவடி சமிதி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட செயலரும் அரசாங்க அதிபருமான க.கணேஷ், சிறப்பு விருந்தினராக யாழ். இந் துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் ஆகி யோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்த உள்ள னர்.

மேலும் நிகழ்வில் குருதேவரின் பாடல் களும், கலை நிகழ்ச்சியாக தனிநடனம், 'யாருக்கு யார் காவல்' எனும் நாடகம், இணுவில் இளந் தொண்டர் சபை ஸ்தாபகர் உறுப்பினர் மா.ந.பரமேஸ்வரனின் ஆன்மீக உரை ஆகியனவும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

அத்துடன் இத்தினத்தை முன்னிட்டு எதிர் வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு வடலியடைப்பு சங்கானை மேற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் மருத்துவ ஆய்வுமுகாம் நடைபெறவுள்ளது. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை, மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து நடத்தவுள்ள மருத்துவ முகாமில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டினேஸ் ஜெயகுமாரன் மருத்துவ ஆலோசனைகள் வழங்கவுள்ளார். (ஓ-4)

## காலம்தாழ்த்திய பஸ் சேவையால் பயணிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7 மணிக்கு ஊர்காவற்றுறை செல்லும் (இல.777) பஸ்சேவை காலம்தாழ்த்தி 7.15-7.30 மணிக்கு புறப்படுவதால் ஊர்காவற்றுறை செல்லும் பாடசாலை ஆசிரியர்கள், கூட்டுறவு ஊழியர்கள்,வர்த்தக ஊழியர்கள், தனியார் கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவ மாணவிகள், வைத்தியசாலை ஊழியர்கள் உட்பட பலதரப்பட்டவர்கள் காலை 9 மணிக்கு பின்பே ஊர்காவற்றுறை வந்து சேர்வதாக தெரி விக்கப்படுகிறது. என்வே சம்பந்தப்பட்ட அதி காரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ஓ-72)

## நன்னீரைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்


### மீனவக் குடும்பங்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிகளில் வசித்துவரும் மீனவக் குடும்பங்கள் நீண்டகாலமாக நல்ல குடிநீரைப் பெற முடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

குறிப்பாக முனை தொடக்கம் தொண்டைமானாறு வரை உள்ள பல ஆயிரக்கணக் கான மீனவர்கள் நீண்டகாலமாக உவர் நீரையே பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக் கின்றனர்.

இப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தமக்கு நிரந்தரமாக நல்ல குடிநீரைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின் றனர். வல்லிபுரம் பகுதியிலிருந்து தமக்கு குழாய் மூலம் நல்ல குடிநீரைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறும் இப்பகுதி மக்கள் இக் கோரிக்கையில் தெரிவித்துள்ளனர். (ஓ-10)



யாழ்ப்பாணப் பிரதேச செயலக யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வலயத்திற் குட்பட்ட சமுர்த்தி பயனுகரி ஒருவரின் மரண இழப்பிற்காக அவரது மனைவிக்கு சமூக பாதுகாப்பு உதவுதொகையாக பத்தாயிரம் ரூபாவினை சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் ம.கியூமன் வழங்குவதைப் படத்திற் காணலாம்.

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முறைசாராக் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறை சாராக் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது.13 பாடசாலைகளில் எட்டு செயற்பாடுகள் இவ் வருடம் மேற்கொள்ளப்பட வுள்ள தெனவும் மேலதிகமாக இம்முறை முதியோர் கல்வியும் இணைக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பயிற்சியில் இணைய விரும்பும் பாட சாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த இளை ஞர், யுவதிகள் தாம் தெரிவு செய்யும் பயிற்சி நெறி நடைபெற இருக்கும் பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக் கலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

தையல் கலைப் பயிற்சி- மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்,குடமியன் அ.த.க. ஆகிய பாட சாலைகளிலும் கணனி திருத்துதல் பயிற்சி- கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம் ஆகியற்றிலும் எழுத்தறிவூட்டல் பயிற்சி சாவகச்சேரி கச்சாய் வீதி சக்தி அம்மன் வித்தியாலயம், போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், மிருசுவில் அ.த.க. ஆகிய பாடசாலைகளிலும் முதியோர் கல்வி- மந்து வில் றோ.க.த.க.பாடசாலையிலும் செயற் பாட்டுக் கல்வி- சாவக்சேரி கச்சாய் வீதி சக்தி அம்மன் வித்தியாலயத்திலும், சிகை அலங்காரமும் ஒப்பனையும்- மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையிலும், பெண்களுக் கான உடையமைத்தல் -சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திலும் உணவு தயாரித்தல் கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலையிலும் நடத்தப்படவுள்ளன. (ஓ-29)



சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## ஆலோசனைக் கூட்டம்

(சாவகச்சேரி)

பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவம் தொடர்பான ஆலோ சனைக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை காலை 10மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் எனவும் சம்பந்தப்பட்டவர்களை கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித் துள்ளார். (ஓ-29)

## டிப்ளோமா கற்கைநெறிக்கான மீள்வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான மீள் வகுப்புக்கள் எதிர்வரும் 29 ஆம்திகதி ஞாயி றன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகு மென யாழ். பிராந்திய நிலைய இணைப் பாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவையின் அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள் வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன. இதில் ஏற்கனவே அங்கத்துவம் பெற்ற வர்களும் புதிதாக அங்கத்துவம் பெற விரும் புபவர்களும் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று மார்ச் மாதம் 15ஆம் திகதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப் பிக்கும்படி கலாசாரப் பேரவையின் தலை வரும் பிரதேச செயலருமான தி.மரியதாஸ் ஜெசூ கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## இலவச கண்சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

அராலி, வட்டுக்கோட்டை மக்களின் நன்மை கருதி மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினால் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அராலி மத்தியில் உள்ள முன்னாள் பிரபல கணித விஞ்ஞான ஆசிரியரும் சமாதான நீதிவானுமாகிய அ.செல்வரட்ணத்தின் இல்லத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப் பிரதேசத் தில் வசிக்கும் மக்களை இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஓ)

# காக்கைதீவு மீன்பிடித் துறைமுகத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவல்கட்டு கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி காக்கைதீவு மீன் பிடித்துறைமுகம் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் கடற் றொழில் நீரியல்வள உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் இருந்த இத்துறைமுகம் கடந்த வருடம் வீசிய நிஷா புயலினாலும், வெள்ளப் பெருக்கினாலும், பலத்த சேதத்திற்குள்ளாகியிருந்தது.

இத்துறைமுகத்தினூடாக நாவாந்துறை கடற்பிரதேசத்திற்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் சாவல்கட்டு மீனவர்கள் நாளாந்தம் பல சிரமங்களுக்கு மத்தியில் இத்துறைமுகத்தினூடாக தொழில் செய்து வந்தனர்.

இத்துறைமுகம் புனரமைக்கப்படாதது குறித்தும், இதனால் மீனவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் குறித்தும் சாவல்கட்டு கடற்றொழிலாளர்கள் சங்கம் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து இத்துறைமுகம் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவிருக்கிறது.

தற்பொழுது புனரமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதால், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் இதற்கான மதிப்பீட்டு வேலையை ஆரம்பித்துள்ளார். (6)

# முச்சக்கர வண்டிக்கான பெற்றோல் மானியம் அமுலுக்கு வந்துள்ளது

முச்சக்கர வண்டிகளுக்கு அறிவிக்கப்பட்ட 20 ரூபா பெற்றோல் மானியம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி நேற்று முதல் முச்சக்கர வண்டிகளுக்கு ஒரு லீற்றர் பெற்றோல் 100 ரூபாவுக்கு விநியோகிக்கப்படவிருப்பதாக சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.சி. திலக்கசிறி தெரிவித்துள்ளார். இது குறித்து பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

உலக சந்தையின் எரிபொருள் விலைகளுக்கு ஏற்ப உள்நாட்டிலும் எரிபொருள் நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்ததற்கமைய டீசல், மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோலின் விலைகளை அரசாங்கம் குறைத்திருந்ததுடன், முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் 20 ரூபா மானியத்தை அறிவித்திருந்தது.

இதனடிப்படையில், ஒரு முச்சக்கரவண்டிக்கு மாதமொன்றுக்கு 75 லீற்றர் பெற்றோலை, லீற்றர் 100 ரூபா என்ற அடிப்படையில் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டதற்கமைய அதனை நேற்று முதல் நடைமுறைப் படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# அமெரிக்க செனட் சபையில் இலங்கை நிலவரம்; முன்னாள் தூதுவர் உட்பட மூவர் சாட்சியம்

அமெரிக்காவின் அதிகாரம் வாய்ந்த செனட் சபையின் வெளிவிவகார குழு முன்னிலையில் நேற்று முன்தினம் இலங்கை நிலவரம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, இலங்கையில் முன்னர் அமெரிக்க தூதுவராகக் கடமையாற்றிய ஷெவ்ஃரி லங்ஸ்டட் உட்பட மூவரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதாக வொய்ஸ் ஒப் அமெரிக்கா இணைய தளம் செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செனட் சபை உறுப்பினர் பொப் பேஷியின் தலைமையில் நேற்று முன்தினம் இந்நிகழ்வு இடம் பெற்றது. இதன்போது, சாட்சியத்திற்காக அழைக்கப்பட்டிருந்த மனித உரிமைகள் காப்பகத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் அனா நீஸ்டாட் இலங்கையில் கடந்த 25 வருடங்களாக மனித உரிமைகள் மீறப்பட்டு வருவ தாகக் குறிப்பிட்டார்.

தற்போது வன்னியில் அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு வலயத்திற்குள் படையினரின் எறிகணை வீச்சுக்கள் காரணமாக பலர் கொல்லப்பட்டுள்ளதாக குறிப் பிட்ட அவர், தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது கட்டுப்பாட்டில் உள்ள மக்களை வெளியேறுவதற்குத் தடை விதித்து வருவதாக குற்றம் சுமத்தினார்.

''அரசாங்கத்தினால் பல தமிழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போயுள்ளார்கள். அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர்.

எனினும், இதற்கெதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை'' என இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஷெவ்ஃரி லங்ஸ்டட் இதன்போது தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்படுவதாகவும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நிலையில் உலக நாடுகள், இலங்கை விடயத்தில் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் எனவும் ஷெவ்ஃரி லங்ஸ்டட் தெரிவித்தார்.

சர்வதேச நன்கொடையாளர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு நிபந்தனைகளை விதிக்க முடியும் எனவும் அவர் பரிந்துரைத்தார். இந்த நிபந்தனைகளில் மீள்குடியேற்றம், மனித உரிமை நிலவரங்கள் என்பனவும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அனா நீஸ்டாட் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை இலங்கையின் மனிதாபிமான நிலவரம் குறித்து அமர்வு ஒன்றினை நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இந்த சாட்சியங்களின் பின்னர் கருத்துரைத்த ஜனநாயக கட்சியின் செனட் சபை உறுப்பினர் பொப் கேஷி, "இலங்கை அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட ரீதியில் தமிழர் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நடைமுறை நீக்கப்பட வேண்டும். அத்துடன் நடைமுறை யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என இலங்கை அரசாங்கம் கூறுகின்ற போதும், அரசாங்கத்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மாற்றாகத் தமிழ் பிரதிநிதிகளை தேடிக் கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறு அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ-6)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் 2008 ஆம் அண்டு கார்த்திகை மாதம் நடாத்தப்பட்ட தரம் 12, தரம் 13 மாணவர்களுக்கான உயிரியல், கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சை பெறுபேறுகள் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு பாடத்திலும் தெரிவு செய்யப்பட்ட முதல் 25 மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

### தரம் 13 உயிரியல் பிரிவு

ஏ.எஸ். பிரசாந் - சென்பற்றிக்ஸ் கல்லூரி, எஸ். யதுகுலன் - யாழ். இந்துக் கல்லூரி, எஸ். ரகுவரன் - நெல்லியடி ம.வி., ரி. சுதாசினி - யாழ். இந்து மகளிர் கல்லூரி, கே. லாவண்யா - யாழ்ப்பாணக் கல்லூரி, ஆர். ரூபினி - யாழ். இந்து மகளிர் கல்லூரி, கே. நிரோஜி - யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எஸ். சரண்ணியா - யா. வேம்படி மகளிர் கல்லூரி, கே. உமாசுதன் - ஹாட்லி கல்லூரி, ஜெ. ஜோன் செல்ரன் - சென்பற்றிக்ஸ் கல்லூரி, ரி. துஸ்யந்தன், எஸ். சிவரஞ்சன், ஏ. அகிலன் - ஜி. சுதர்சன் (யாழ். இந்துக் கல்லூரி) எஸ். குயிந்தன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, எம். நிரோசன், ரி. சஞ்சயன் (யாழ். இந்துக் கல்லூரி) வி. சிந்துஜன் - சென்ஜோன்ஸ் கல்லூரி, ரி. பார்த்தீபன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, பி. கார்த்தீபன் - சென்ஜோன்ஸ் கல் லூரி, பி. குகநாத், பி. கபிலேசன் (யாழ். இந்துக் கல்லூரி) கே. அரசிளங்குமரன் - சென்ஜோன்ஸ் கல்லூரி, கே. முரளி - யாழ். இந்துக் கல்லூரி, வி. சுயந்தன் - சென்ஜோன்ஸ் கல்லூரி.

### தரம் 13 கணிதப் பிரிவு

ஏ. யோன்நிரோஜ் - ஹாட்லி கல்லூரி, இ. முரளீதரன் - மகாஜனாக் கல்லூரி, ஜெ. லடேஸ் லொய்யாஸ் - சென் பற்றிக்ஸ் கல்லூரி, த. எழில்வேந்தன் - யாழ். இந்துக் கல்லூரி, எஸ். தமயந்தி - கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ். பிரசாந், எஸ். ராகுலன், ரி. ஜெயந்தன் (ஹாட்லி கல்லூரி) ஆ. கஜந்தன் - சென் ஜோன்ஸ் கல்லூரி, எஸ் தனஞ்சயன் - ஹாட்லி கல்லூரி, யூ. சாந்திக்கா - நெல்லியடி ம.வி., ப. பிரகாஸ் - விக்டோறியாக் கல்லூரி, பே. பிருந்தன், ம. ராகவன் (யாழ். இந்துக் கல்லூரி) எஸ். சிந்துஜன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, எம். அன்ரனிகிளைன் - சென்பற்றிக்ஸ் கல்லூரி, எல். நரேஸ்குமார் - கொக்குவில் இந்துக் கல்லூரி, ஜெ. பிரகதீஸ் - ஹாட்லி கல்லூரி, என். சபேசன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, அ. புருசோத்தமன் - யாழ். இந்துக் கல்லூரி, எஸ். கோகுல் - ஹாட்லி கல்லூரி, கே. அபிராம், ஆர். கஜதர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஜி. தர்சன் - ஹாட்லி கல்லூரி, ஆ. ஜெசுரன் - சென் ஜோன்ஸ் கல்லூரி.

### தரம் - 13 - வர்த்தகப்பிரிவு

ரி. சோபிதா, எஸ். சிவகாமி, வி. அர்ச்சனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே. சக்திநாயகி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, எஸ். வாகினி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஆர். வருணன் - ஹாட்லி கல்லூரி, என். லக்ஷனா - யூனியன் கல்லூரி, பி. சியாமா - வேம்படி மகளிர் கல்லூரி, சு. சபினா - கனகரத்தினம் ம.வி, ஏ. அன்ரனி ஜோன்சன் - ஹாட்லி கல்லூரி, வி. பிரியங்கா - வட இந்து மகளிர் கல்லூரி, து. விசுவராஜ் - விக்டோறியாக் கல்லூரி, எஸ். துவாரகா - வட இந்து மகளிர் கல்லூரி, எஸ். கவிதா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., எஸ். சோபிகா - இந்து மகளிர் கல்லூரி, எஸ். தேவகி - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, க. தட்சாயினி - இடைக்காடு ம.வி., எஸ். சயந்தன் - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, ஜே. லேகா - இந்து மகளிர் கல்லூரி, என். கீர்த்திகா - யூனியன் கல்லூரி, எ. அஜிதா, ஆர். ஜீவிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ச. ஜஸ்வரியா - வேம்படி மகளிர் கல்லூரி, கே. பிரசன்னா - யூனியன் கல்லூரி, ஏ. வானுஜி - இந்து மகளிர் கல்லூரி.

### தரம் 12 - உயிரியல் பிரிவு

பி. கோகுலன் - ஹாட்லி கல்லூரி, ஏ. நிதர்சன் - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, எஸ். கஜனன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ். விசாகன் - சாவக்சேரி இந்துக் கல்லூரி, எம். பார்த்தீபன், ஏ. விதுரன் (ஹாட்லி கல்லூரி), ஏ. பகிரதி, ஏ. சுபாங்கி (வேம்படி மகளிர் கல்லூரி), பி. துஸ்யந்தன் - சென் ஜோன்ஸ் கல்லூரி, ஆர். ஹம்சத்வனி - வேம்படி மகளிர் கல்லூரி, வி. அரவிந்தன் - நெல்லியடி ம.வி., வை. சரண்ஜா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வி. நிசாந்திகா, எஸ். யசோதரா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆர். மாதங்கி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, எஸ். றுக்சிகா - வேம்படி மகளிர் கல்லூரி, ஜெ. யூலிட்ஸ் கெலினா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பி. துவாரகா - வேம்படி மகளிர் கல்லூரி, பி. விஸ்ணுகாந் - கொக்குவில் இந்துக் கல்லூரி, பி. சுஜீவன் - சென் ஜோன்ஸ் கல்லூரி, க. கோபிகா - மெதடிஸ்த மகளிர் கல்லூரி, வி. ஜீவேந்திரன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, ஏ. ஜினித்திரி - வேம்படி மகளிர் கல்லூரி, ஏ. கோகுலரூபன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, ஜி. தட்சாயினி - வேம்படி மகளிர் கல்லூரி.

### தரம் 12- கணிதப்பிரிவு

ரி. பிரணவன் - ஹாட்லி கல்லூரி, எஸ். யசோதரன் - சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி, எஸ். சுமங்கலி - வேம்படி மகளிர் கல்லூரி, ஜே. ஸ்ரீகுமார் , எஸ். ஜெயராம் (ஹாட்லி கல்லூரி), எஸ். கௌசல்யன் - சென் ஜோன்ஸ் கல்லூரி, பி. தர்சன் - யாழ்ப்பாணக் கல்லூரி, எஸ். ரஜீபவன் , எஸ். சிவராம், ஏ. ஹரிகாலன் (ஹாட்லி கல்லூரி), ந. திருத்தணிகன், மு. பிருந்தாவன் (யாழ். இந்துக் கல்லூரி), கே. உபமன்யு - சென் ஜோன்ஸ் கல்லூரி, ரி. உதயபவன், எஸ். வசந் (கொக்குவில் இந்துக்கல்லூரி), எஸ். அருளினி - நெல்லியடி ம.வி., பி. ஜெனோத் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அ. பஜிரன் , இ. ஸ்ரீசியாமளன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். சிந்துஜா - நெல்லியடி ம.வி., யோ. கோபிநாத், செ. நிரோசன் (யாழ். இந்துக் கல்லூரி), ஏ.வை. அனற் நிசாந்தா - வேம்படி மகளிர் கல்லூரி, அ. சசிந்தன் - யாழ். இந்துக் கல்லூரி, டி. ஜெனிவர் - யாழ்ப்பாணக் கல்லூரி.

### தரம் - 12 - வர்த்தகப் பிரிவு

பி. ராஜாராம் - ஹாட்லி கல்லூரி, வை. சரணியா - இந்து மகளிர் கல்லூரி, ஏ. அகல்யா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கே. அனித்தா - ஞானாசாரியர் கல்லூரி, ரி. மயூரி - இந்து மகளிர் கல்லூரி, ஏ. கோகுலன் , எஸ். பவிதா (நெல்லியடி ம.வி), -ஆர். பவித்திரா - இந்து மகளிர் கல்லூரி, எஸ். கயல்விழி, ந. மேரி செலஸ்ரீனா (விக்டோறியாக் கல்லூரி), ஜி. மாலினி - வட இந்து மகளிர் கல்லூரி, ரி. தனசாந்தி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எம். லக்ஸ்ரலா - வேம்படி மகளிர் கல்லூரி, ரி. மதனிகா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வி. தர்சிகன் - ஹாட்டலி கல்லூரி, கே. சுயாதா - கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ். நிரோஜனி - வல்வை மகளிர் கல்லூரி, ரி. கிரிசிகா - இந்து மகளிர் கல்லூரி, எஸ். கிரிதரன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, எம். பிரியங்கா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஆர். ஜீவகி - இந்து மகளிர் கல்லூரி, என்.டிலொக்சி, ரி. சசிரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜி. சுபநாதன் - ஹாட்லி கல்லூரி, ஆர். தர்சினி - இளவாலை மடம் ம.வி.

# திருகோணமலைக்கு அழைத்து வந்தோரில் 11 பேர் உயிரிழப்பு

## மாகாண சுகாதார அமைச்சு தகவல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டவர்களில் 11 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


கடந்த பெப்ரவரி 11 ஆம் திகதி முதல் பெப்ரவரி 23 ஆம் திகதி வரை முல்லைத் தீவிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலை வைத்தியசாலைக்கு நான்கு தடவைகள் ஆயிரத்து 705 பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அழைத்துவரப்பட்டார்கள். இவர்களில் 11 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். (6)

# தொப்புள்கொடி உறவுகளை பாதுகாக்க வலியுறுத்தும் போராட்டம் பாராட்டுக்குரியது

## சட்டத் தரணிகளின் உண்ணாவிரத போராட்டத்தில் வைகோ

(சென்னை)

இலங்கையில்தாய்மார்கள் ,குழந்தைகள்அழிக்கப்படும்நிலையில் அவர்களுக்கு அரணாக போராடும் விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்டுவோம் என்று கூறும்ராஜபக்



ஷவை என்ன செய்வது என்று நாங்கள் துடித்துக் கொண்டு இருக்கிறோம் என்று மதிமுகபொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார். இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படக்கோரியும்,சென்னை உயர்நீதிமன்றில் சட்டத்தரணிகள்மீது தாக்குதல் நடத்தியபொலிஸார்மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும்மதுரையில் சட்டத்தரணிகள் தொடர் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பாக உண்ணா விரதம் இருந்த சட்டத்தரணிகளை தமிழர்தேசிய பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, பாமக நிறுவுனர் இராமதாஸ் உட்பட பலர் வாழ்த்திப் பேசினர்.

மாலை 5 மணி அளவில்விடுதலை சிறுத்தைகள் கட்சிதலைவர்திருமாவளவன் , பழச்சாறு கொடுத்துஉண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

இதில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பேசும் போது ,

தமிமீழ மக்களின் துன்பத்தை தவிர்க்க உறக்கத்தில் இருக்கும் தாய்தமிழகம் விழிக்காதா என்று நினைத்த நேரத்தில் தொப்புள் கொடி உறவினரான சகோதரர்களை பாதுகாக்க,சட்டத் தரணிகள் போராட்டத்தில் குதித்திருப்பது பாராட்டுக்குரியது.

எந்தபோராட்டம் என்றாலும் கந்தகம் என்னும் தீப்பொறி களம் பதிக்கவேண்டும்.அது 'போல தீக்குளித்துஇறந்த முத்துக் குமார் என்னும் கந்தகம் மூட்டியதீயைஇனி யாராலும் அணைக்கமுடியாது.

அது இன்று ஐ.நா சபையிலும் எரிகிறது. இலங்கை தமிழர்களுக்காக4 மாதங்களாக போராட்டம் நடக்கிறது.

அதேபோல் இலங்கையில் தாய்மார்கள் , குழந்தைகள்அழிக்கப்படும் நிலையில் அவர்களுக்கு அரணாக போராடும் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டுவோம் என்று கூறும் ராஜபக்ஷவை என்ன செய்வது என்று நாங்கள் துடித்துக்கொண்டு இருக்கிறோம். சென்னை உயர் நீதிமன்றில் கற்களே இருக்காது.


பொலிஸாரே திட்டமிட்டு மூட்டை ,மூட்டையாக கற்களை கொண்டு வந்து , வக்கீல்கள் மீது தாக்குதல்நடத்தி உள்ளனர். தற்காப்புக்காக சட்டத்தரணிகளும் தாக்குதலில் ஈடுபட்டதில் தவறில்லை.

சட்டத்தரணிகளின் அறிவழி போராட்டம் தொடரவேண்டும் அதற்கு நாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார். (ஓ-6)

## சீமான் மீண்டும் கைது

(புதுச்சேரி)

பாளையங்கோட்டையில் சர்ச்சைக்குரிய விதத்தில் பேசிய இயக்குநர் சீமானை பாளையங்கோட்டை பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்தனர். புதுச்சேரியில் சட்டக் கல்லூரி மாணவர்கள் நடத்திய உண்ணாவிரதப்



போராட்டத்தில் சர்ச்சைக்குரிய விதத்தில் பேசிய சீமான் மீது நான்கு பிரிவுகளில் பொலிசார் வழக்கு பதிந்தனர். அவர் தற்போது கைது செய்யப்பட்டு புதுச்சேரி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

புதுச் சேரி பொலிசார் வழக்கு பதிவு செய்து தேடி வந்தபோது பாளையங்கோட்டையில் வக்கீல் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் சீமான் பங்கேற்று பகிரங்கமாக பேசினார். சர்ச்சைக்குரிய விதத்தில் பேசிய சீமான் மீது அவதூறாக வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசுவது தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது உள்ளிட்ட பிரிவுகளில் பாளையங்கோட்டை பொலிசார் வழக்குபதிவ செய்தனர். சீமான் தொடர்ந்து புதுச்சேரி மத்திய சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளார்.

(ஓ-6)

# விசாரணை என்ற பேரில் சித்திரவதை தமிழகம் சென்ற அகதி தெரிவிப்பு

(இராமேஸ்வரம்)

விசாரணையின் பெயரில் இராணுவத்தினர் சித்திரவதை செய்வதாக இராமேஸ்வரத்திற்கு அகதிகளாக வந்தவர்களுள் ஒருவர் தெரிவித்துள்ளார்.



மன்னாரைச் சேர்ந்த 3 பெண்கள், 4 குழந்தைகள் உட்பட 12 அகதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று அங்கிருந்து படகில் புறப்பட்டு திங்கட்கிழமை கோதண்ட ராமர் கோயில் கடற்கரையை வந்தடைந்தனர்.

அங்கிருந்து தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்திற்கு வந்த அகதிகள் விசாரணைக் குட்படுத்திய பின்னர் மண்டபம் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.அவர்களுள் ராஜசேகரன் மேரிடயானா கூறுகையில், இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதால் எங்கும் சுதந்திரமாக சென்று வரமுடியவில்லை. விசாரணை என்ற பெயரில் பலரை பிடித்து சித்திரவதை செய்கின்றனர். தொழில் வாய்ப்புகளும் இல்லை.

வருமானத்துக்கு வழியில்லாததால் அன்றாட் செலவுகளுக்கே கஷ்டமாக உள்ளது. நிம்மதியாக ஏதாவது தொழில் செய்து பிழைத்து கொள்ளலாம் என இங்கு அகதியாக வந்தோம் எனக் கூறினார். (ஓ-6)

# சட்டத்தரணிகளை தாக்கிய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கும் வரை போராட்டம் தொடரும்

## வக்கீல்கள் சங்கத் தலைவர் அறிவிப்பு

(சென்னை)

உயர் நீதிமன்றச் சம்பவம் தொடர்பாக போராட்டம் தொடரும் என்று சட்டதரணிகள் அறிவித்துள்ளனர். நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக அவர்கள் உண்ணா விரதம் இருந்தனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை சென்னை உயர்நீதிமன்றில் நடந்த மோதலின் போது சட்டத்தரணிகளைத் தாக்கிய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றம் முன்பு கடந்த திங்கட்கிழமை சட்டத்தரணிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக உண்ணாவிரதம் இருந்தனர்.

அவர்களுக்கு ஆதரவாக சென்னை டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி மாணவர்களும் உண்ணாவிரத பந்தலுக்கு கோஷமிட்டபடி வந்தனர்.

சட்டத் தரணிகள் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் கறுப்பு இலச்சினை அணிந்திருந்தனர். பொலிஸாரை கண்டித்து எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் கையில் வைத்திருந்தனர்.

இதற்கிடையே உயர்நீதிமன்ற சம்பவம் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த வருமாறு சட்டத்தரணிகளுக்கு சட்ட அமைச்சர் துரை முருகன் அழைப்பு விடுத்திருந்தார். அதில் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

உண்ணாவிரத போராட்டத்திற்கு தலைமை வகித்த சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்க தலைவர் ஆர்.சி.பால்கனகராஜ் இது பற்றி நிருபர்களிடம் கூறியதாவது,

உயர்நீதிமன்ற வளாகத்திற்கு பொலிஸார் அத்துமீறி நுழைந்து வக்கீல்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தி 5 நாட்கள் ஆகிவிட்டது. ஆனால், இதுவரை அரசு முதல்கட்ட நடவடிக்கை கூட எடுக்கவில்லை. எனவேதான், இந்த தாக்குதலில் ஈடுபட்ட பொலிசார் மீது இடைநிறுத்தம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கோரி இரண்டாவது நாளாக உண்ணாவிரத போராட்டம் நடத்துகிறோம்.

இந்த நிலையில், சட்டதரணிகள் பேச்சு வார்த்தைக்கு வர வேண்டும் என்று அரசு அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக அரசாணையும் வெளியிடப்பட்டு உள்ளது.


முதலில் சட்டத்துறை அமைச்சர், சம்பவம் நடந்த உயர்நீதிமன்ற வளாகத்தை பார்வையிட வேண்டும். காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வரும் சட்டத்தரணிகள் மற்றும் தாக்குதலில் சேதமடைந்த மோட்டார் சைக்கிள்கள், கார்கள், உயர்நீதிமன்ற சொத்துக்கள் ஆகியவற்றையும் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை இடை நிறுத்தம் செய்ய வேண்டும். அதன் பின்னர் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுப்பதே நியமாமாக இருக்கும்.

பொலிஸார் கொடுத்த அறிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு எங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் நாங்கள் செல்லவில்லை. எங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்றார். (ஓ-6)

# தி.மு.க. அரசை கலைக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் அ.தி.மு.க.மனு

(சென்னை)

தமிழகத்தில் ஆளும் திமுக அரசை கலைக்க உத்தரவிடக்கோரி அதிமுக சார்பில்



உச்ச நீதி மன்றத்தில்மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இது குறித் து அக்கட்சியைச் சேர்ந்த மாநில முன்னாள்சட்ட அமைச்சர் டி.ஜெயக் குமார் உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள பொது நல்மனுவில் கூறியுள்ளதாவது, சென்னை உயர் நீதி மன்ற வளாகத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற வன் முறைச் சம்பவங்கள் மூலம் மாநிலத்தில் சட்டம்,ஒழுங்கு முழுமையாகச் சீர்குலைந்து விட்டது.

பொலிஸாரின் கொடூரமான தாக்குதலில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள்,அப்பாவிபொது மக்கள் எனப்பலரும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த வன்முறையின் காரணமாக தமிழகம், புதுவையில் உள்ளஅனைத்து நீதிமன்றங்களுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது. சென்னைஉயர் நீதிமன்ற வளாகத்தின் அனைத்து வாயில்களும் பூட்டப்பட்டு பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதனால் மேலும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதற்கான பதற்றமானசூழல் நிலவுகிறது. துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான உத்தரவும் காவல்துறைசார்பில் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் நீதிமன்றப் பணிகள்முற்றிலும் முடங்கியுள்ளன. இப்பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் உடனடியாகத் தலையிட வேண்டும். சட்டம் ,ஒழுங்க முழுமையாகச் சீர் குலைந்துள்ள தமிழகத்தில் அரசியல் சட்டப்பிரிவு 356-ஐ பயன்படுத்தி தமிழகஅரசைக் கலைக்க வேண்டும்.அதற்கான அறிக்கைகளை குடி யரத் தலைவருக்கு அனுப்பி, ஆட்சியைக் கலைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப் பட்டவர்களுக்கு,உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என ஜெயக்குமார் அந்தமனுவில் வலியுறுத்தியுள்ளார். (ஓ-6)

# கலைத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 71பேருக்கு 'கலை மாமணி' விருது அறிவிப்பு

(சென்னை)

நடிகைகள் அசின், நயன்தாரா, பழம் பெரும் நடிகை சரோஜாதேவி, ரஜினிகாந்த் மகள் ஐஸ்வர்யா, அறிவிப்பாளர் சரோஜ் நாராயணசுவாமி உட்பட 71 பேருக்கு கலைமாமணி விருதை தமிழக அரசு அறிவித்துள்ளது.

கலைத்துறையில் சிறப்பாகப் பணியாற்றி வரும் கலைஞர் களைப் பாராட்டி ஆண்டுதோறும் மாநில அள விலான கலைமாமணி விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு விருதுக்குரியவர்களை இயல், இசை, நாடக மன்றம் பரிந்து ரைத்து முதல்வருக்கு அனுப்பியது.

முதல்வர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் விருது பெறுவோர் ,

முன்னாள் துணைவேந்தர் அவ்வை நட



ராஜன், வயலின் எம்பார் கண்ணன், டிரம்ஸ் சிவமணி, பேச்சாளர் சுகி சிவம், பாடகர் வீரமணி ராஜு பரத நாட்டியக் கலைஞர்கள் ஐஸ்வர்யா ரஜினிகாந்த், வசந்தா வைகுந்த், நாடக தயாரிப்பாளர் கூத்துப்பட்டறை முத்துசாமி ஆகியோருக்கு கலைமாமணி விருது வழங்கப்படுகிறது.

திரைப்படத்துறையில் அபிராமி ராமநாதன், நடிகர்கள் சேரன், சுந்தர்.சி, பசுபதி, பரத், வையாபுரி, நடிகைகள் அசின், நயன்தாரா, மீரா ஜாஸ்மின், ஷாபனா, பழம்பெரும் நடிகை சரோஜாதேவி, வசனகர்த்தா வேதம் புதிது கண்ணன்,இசையமைப்பாளர்ஹாரிஸ்ஜெயராஜ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளனர்.

சின்னத்திரையில் இயக்குனர்கள் சுந்தர் கே.விஜயன், திருச்செல்வம், வசனகர்த்தா பாஸ்கர் சக்தி, நடிகர் அபிஷேக், நடிகைகள் அனுஹாசன், தேவிப்பிரியா, நிகழ்ச்சி தயாரிப்பாளர் ரமேஷ் பிரபா உள்ளிட்டோருக்கு விருது வழங்கப்படுகிறது. பரத நாட்டியக் கலைஞர் ஜாஹீர் உசேன், அறிவிப்பாளர் சரோஜ் நாராயணசுவாமி,கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷிணி உள்ளிட்ட 71 பேர் "கலைமாமணி" விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (ஓ-6)

சேற்றில் உள்ள முள்ளும், வேட்டை நாயின் பல்லும், மூடனுடைய சொல்லும் அதிகமாய்க் குத்தும்.
- அயர்லாந்து

வலம்புரி

## காங்கிரஸ் சேர்க்கும் நிவாரணம் பஞ்சமிக்குப் படைக்கவா?

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரண உதவி வழங்க ஏற்பாடு செய்யுமாறு கட்சித் தொண்டர்களுக்கு இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

இந்திய மாநிலங்களில் இந்த உதவிக்கான அழைப்பை காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் விடுத்துள்ளனர்.

இலங்கை அரசுக்கு போராயுதங்களை வழங்கியமை, ராடர் கருவிகளைக் கொடுத்தமை, ராடர் கருவிகளை இயக்கவல்ல இராணுவ உத்தியோகத்தர்களை அனுப்பி வைத்தமை எனப் பல்பரிமாணங்களில் இலங்கை அரசுக்கு உதவி வழங்கிய இந்திய மத்திய அரசு, இப்போது புதிய நாடகத்தை அரங்கேற்ற முற்பட்டுள்ளது.

அதாவது இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதில் மத்திய அரசு என்ற தகுதி நிலையில் நின்று உதவி செய்யாமல் காங்கிரஸ் கட்சி என்ற சாதாரண அரசியல் கட்சியாக நின்று இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண உதவி வழங்க அந்தக் கட்சி முன்வந்துள்ளது.

வன்னிப் போரில் இந்தியாவின் வகிபங்கின் காத்திரம் உலகெங்கும் வெளிச்சத்திற்கு வந்த நிலையில், அதனை மூடி மறைப்பதில் மத்தியில் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அதன் முதற்கட்ட நடிப்பே ஈழத்தமிழர்களுக்கு நிவாரண உதவி சேர்க்கும் விடயமாகும்.

உண்மையில் ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டுமென இந்திய காங்கிரஸ் கட்சி இம்மியளவேனும் சிந்தித்திருந்தால், இதுவரை வன்னிப் போரில் பலியான அப்பாவி பொதுமக்களின் உயிரைப் பாதுகாத்திருக்க முடியும்.

ஆனால் மத்தியில் அரசாளும் காங்கிரஸ் கட்சிக்கு அந்த நினைப்பு ஏற்படவில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

வன்னிப் போர்க்களத்தில் சிக்குண்ட தமிழ் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தமிழகத்திலுள்ள உறவுகள் துடியாய் துடிக்க –தீக்குளித்து உயிரைத் துறக்க, காங்கிரஸ் கட்சி அதிர்ந்து போனது.

அட! ஈழத்தமிழர் பிரச்சினை, அடுத்த தேர்தலில் காங்கிரஸை தள்ளி விழுத்திவிடும் என்ற பயத்தை ஏற்படுத்த அவசர அவசரமாக நிவாரண உதவிகளைச் சேர்க்குமாறு அந்தக் கட்சி அறிக்கை விட்டுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு நிவாரணம் வழங்க காங்கிரஸ் சேர்க்கும் அரிசி பசிக்கல்ல, பஞ்சமிக்குப் படைக்கவே பயன்படும்.

# உலக நாடுகளின் வற்புறுத்தலுக்கு இலங்கை செவிசாய்க்காதது வருத்தமளிக்கிறது

## இந்திய மார்க்ஸிஸ்ட் கட்சிப் பொதுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போரை நிறுத்த நடுவணரசு வற்புறுத்த வேண்டும். உலக நாடுகளின் வற்புறுத்தலுக்கு பின்னரும் இலங்கை அரசு செவிசாய்க்காமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது என்று மார்க்ஸிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்கரத் தெரிவித்துள்ளார்.

மார்க்ஸிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்கரத் கோயம்புத்தூரில் நேற்று முன்தினம் பத்திரிக்கையாளர்களுக்கு அளித்த போட்டியில்,

இலங்கை பிரச்சினை பற்றி கூறிகையில் இலங்கையில் நடைபெறும் போரில் தமிழர்கள் கொல்லப்படுவது மிகவும் வருத்தம் அளிக்கக் கூடிய விடயம் போர் நடைபெறும் பகுதியில் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது.

ஐ.நா.சபை மற்றும் சர்வதேச நாடுகள் வற்புறுத்திய பின்னரும் இலங்கை அரசு போரை நீடித்து வருகிறது.

போரை நிறுத்த இந்திய அரசு இலங்கைக்கு நிர்பந்தம் விதிக்க வேண்டும். இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்கும் வகையில் 13 ஆவது சட்டதிருத்தத்தை அந்த நாட்டு அரசு பின்பற்ற வேண்டும்.

இலங்கை அரசும்,விடுதலைப்புலிகளும் போரை நிறுத்த அரசியல் தீர்வு காண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (6)

## புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இவ்வருடத்துக்கான செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் போஷகர்களாக கல்லூரி அதிபர் வி.மாணிக்கம், டாக்டர் அ.யோகராசா ஆகியோரும் தலைவராக வி.கே. கணபதிப்பிள்ளை, சிரேஷ்ட உப தலைவராக க.ஜெயபாலசிங்கம், உபதலைவர்களாக கா.பீதாம்பரம், ஆ.தேவராசா, எஸ்.சி. செல்வராசா ஆகியோரும் செயலாளராக மு.சண்முகம் பொருளாளராக ஏ.ஜெயகுமார், கணக்காய்வாள்ராக டாக்டர் த.சீவரத்தினம் ஆகியோ்ரும் அத்துடன் செயற்குழு உறுப்பினர்களாக 13 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-2)

## இடை நிறுத்தப்பட்டிருந்த கச்சாய் ஊடான மினிபஸ் சேவைகள் நேற்று முதல் ஆரம்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதி கச்சாய் தம்புதோட்ட வீதி பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளதால் இடைநிறுத்தப்பட்டிருந்த கச்சாய் ஊடான கொடிகாமம் யாழ்ப்பாணம் மற்றும் கெற் பெலி யாழ்ப்பாணம் மினிபஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் சேவைகள் கொடிகாமத்தில் இருந்து காலை 7 மணிக்கும் கெற்பெலியில் இருந்து 6.30க்கும் இடம்பெறும்.

இதேவேளை கொடிகாமத்திலிருந்து காலை 7 மணிக்கு புறப்படும் மினிபஸ் கச்சாய் ஊடாக யாழ்ப்பாணத்திற்குச் சென்று அங்கிருந்து காலை 10 மணிக்கு புறப்பட்டு அதே பாதையாக கொடிகாமம் செல்லும்.

காலை 6.30க்கு கெற்பெலியில் புறப்படும் மினிபஸ் கச்சாய் வீதியூடாக யாழ்ப்பாணத்தை சென்றடைந்து பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து பி.ப. 2மணிக்கு புறப்பட்டு அதே பாதையூடாக கெற்பெலியை சென்றடையும் என்று தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (ஓ-29)

## பெயர்வளைவு திறப்பும் இல்லமெய்வன்மை போட்டியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலையின் பெயர் வளைவு திறப்பு விழாவும் வருடாந்த இல்ல மெய் வல்லுநர்போட்டியும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க துணைத்தலைவர் வை.தியாகராசா சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் அ.சுப்பிரமணியம் பழைய மாணவரும் பொறியியலாளருமான க.இரவீந்திரகுமாரன், கௌரவ விருந்தினர்களாக பழையமாணவர் க.ஜெய பாலசிங்கம், இருபாலை கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் ப. சேவற்கொடியோன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-6)

## தவக்காலம் பொழிவு



### மனிதனுக்காக செல்வமா? செல்வத்துக்காக மனிதனா?

ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன? (லூக் 9:25)

இன்றைய நவீன உலகில் தனி மனிதனும் சரி ஆட்சித் தலைவர்களும் சரி, வல்லாதிக்க நாயக்கர்களும் சரி தமது வனங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தி செல்வம் சேர்ப்பதிலும் நாட்டு எல்லைகளை விஸ்தரித்து புகழ் சேர்ப் பதிலும் முனைப்புக் காட்டுகின்றனர். பொருளாதார படைப் பலங்களை நிறுவ எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணி செயலாற்றும் நிலைகள் காணப்படுகின்றன. அந்த சந்தர்ப்பங்களில் வாழ்வின் முடிவில் எதுவும் கூட வருவது மில்லை, இறப்பை தடுப்பதும் இல்லை என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.

செல்வத்துக்காக மனிதனா? மனிதனுக்காக செல் வமா? என்று சிந்திக்க வேண்டும். செல்வம் என்று கூறும் போது ஆற்றல்,திறமை,பதவி,வலிமை,நீதி,ஆளுமை,அன்பு அனைத்தையும் குறிப்பிடலாம். இவற்றால் மக்களின் தேடல்கள் தேவைகளை நிறைவு செய்து வாழ்வை மேம்படுத்த உழைப்பது தான் நிஜமான உலக உள்ளங்களின் ஆக்கிரமிப்பு ஆகும்.

இன்று மலர்ந்து நாளை உதிரும் மலர்களைப் பாருங் கள். இயற்கைக்கு அழகையும் மனிதனுக்கு இனிய தேனையும் கொடுக்கின்றன. ஒரு நாள் ஆயுளில் இத் தியாகத்தை மலர்களால் புரிய முடியும் என்றால் பல தசாப்தங்கள் நிறை வளங்களுடன் வாழும் மனித இனம் எத்துணை அர்ப்பணிப்புக்கள் புரிய கடமை உடையவன்.

இறைவார்த்தை வழியில் ஆன்மீக பலத்துடன் வாழும் போது இவற்றை நிறை வேற்றுவது சுலபமாகும். எரியும் திரிகளாகி பிறருக்காக எம்மை இழக்க முற்படுவோம். தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவனும் அதை இழந்து விடுகிறான். என்பொருட்டு தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்கிறான் என்னும் இயேசுவின் வார்த்தைக்கு எம் வாழ்வால் உயிரூட்டுவோம். *எஸ். யேசுதாஸ்*

# பகவானைச் சரணடையுங்கள்

அநியாயம், பொய்மை, அதர்மம் இவற்றால் சூழப்பட்டு இன்றைய உலகம் தத்தளிக்கிறது. மனித உயர்குண நலன்கள் மீள முடியாது சரிந்துவிட்டது. பாவச் செயலைச் செய்வது வறுமை, அறியாமை என்ற கோட்டிலுள்ளவர்கள் என்றில்லாது படித்தவன், பணம் ,பொருள் படைத்தவன் முதலாக அநியாயத்தின் பால் தமதுதேவையை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். உதாரணமாக நோயுற்ற ஏழை நோய்க்குநிவாரணம் தேட வைத்திய சாலைக்குச் செல்கிறான். அவனுக்கு வைத்திய சாலையில் மயக்க மருந்து ஏற்றி அவனது இரண்டு சிறு



நீரகத்தில் ஒன்றை எடுத்து தங்களது வருமானத்திற்காகவேறு ஒருவருக்கு விற்பனை செய்கிறார்கள். இது எந்தளவு நாச காரியமாகும். இவ்வினைப் பயனால் இறைவன் இப் புவியில் சஞ்சரிக்க முடியுமா?

சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவை சமுதாயத்தில் நிலவுமா? பஞ்சபூதங்கள் பொறுமையைக் கடைப் பிடிக்குமா? சூறாவளி, எரிமலை, கடல் காவு கொள்ளல் மனிதபாவ நிறைதாளாது தானியங்கி இயந்திரங்களாகும். இதேவேளையில் நமக்கு நாமே எதிரிகளாகி எதை இழக்கக் கூடாது என்ற எண்ணம் கொள்கிறோமோ அவையனைத்தையும் இழந்து எதிரிகளாகி வாழும் நிலையில் இறைவனே இரக்கமில்லையா. கருணையில்லாயா என்று கெஞ்சுகிறோம்! ஏங்குகிறோம்.

அமைதியான வாழ்வு மீளவும் புத்துயிர் பெறவேண்டுமானால் பகவான்சாயியின் பால் பற்றுறுதி கொண்டுஅவர் காட்டும் வழிநடத்தல்வேண்டும். இன்று எங்கள் முன் மனித வடிவத்தில் நடமாடும் பரந்த தெய்வம் பகவானின் நாமத்தை தினந்தோறும் முணுமுணுத்தாலும் சரி, பெரிதாக உச்சரித்தாலும் சரி பகவான் உங்கள் முன் ஏதோஒரு வகையில் காட்சி தருவார் காட்சி எனும் போது பகவானின் உருவம் என்ற அர்த்தம் கொள்ளலாகா அவரை நினைத்தபடி செய்யும் கருமம். வேண்டும் வரம், நோய் நீங்க, கஸ்டம்நீங்க, வாழ்வின் துன்பம் அகல பகவானே நேரில் வந்து உதவிய எண்ணம் உங்கள் மனதில் தோன்றும்.

இவ்வாறு நாம் நடந்து கொள்ளும் போது எங்களுக்குள்ளேயே பெரிய மாற்றங்கள் ஏற்படுவதைக் காணலாம். பகவானின் பக்தர்களாக நம்மை நிலை நிறுத்திக் கொண்ட பிறகு எங்களில் என்னமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. என்பதை புரிய நம்மை நாமேபரிசோதனை செய்து கொள்ளலாம்.எனவே

**ஜெய் சாயிராம்**

என்னநடந்தாலும், எத் துன்பம் நேர்ந்தாலும் எல்லாம் வல்ல சத்ய சாயி பகவானின் வழி நின்று அவர் பாதார விந்தையினை பற்றுறுதி கொண்டு தொடுவோமாக.

*யாதவன்*

## மும்பைத் தாக்குதல் விசாரணை தொடர்பில்

# இந்தியா அளித்த விபரங்களில் சந்தேகம்;

# தொலைபேசி தகவலையும் கோருகிறது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

அஜ்மல் கசாப்பை மும்பைக்கு அனுப்பி வைத்தார்கள். அவனுடன் தொலைபேசியில் பேசியதாகக் கூறப்படும் தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால், அத் தகவலையும் எங்களுக்கு தர வேண்டும் "என பாகிஸ்தான் அதிகாரிகள் இந்தியாவிடம் வலியுறுத்தி உள்ளனர். மும்பைத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர். மும்பை சம்பவம் குறித்து இந்தியா எழுப்பிய சந்தேகங்களுக்கு கடந்த 12 ஆம் திகதி பாகிஸ்தான் தரப்பில் பதில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இதுதொடர்பாக 30 கேள்விகளையும் அனுப்பிவைத்து அவற்றுக்கு இந்தியா பதில் அளிக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் அதிகாரிகள் கேட்ட கேள்விகள் குறித்து தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. அதுபற்றிய விபரம் வருமாறு, அபு ஹம்சா, கபா ஆகியோர் தான் அஜ்மல் கசாப்பையும், மற்ற ஒன்பது பேரையும், மும்பைக்கு அனுப்பி வைத்ததாக இந்தியா கூறி வருகிறது. இந்த இருவரும், அஜ்மல் கசாபுடன் தொலைபேசியில் பேசியதாகவும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு தொலைபேசியில் பேசிய விவரங்கள் பதிவுசெய்யப்பட்டு இருந்தால், அவற்றை எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மும்பை தாக்குதல் குறித்த விசாரணையை நடத்துவதற்கு இது எங்களுக்கு உதவியாக இருக்கும். பயங்கரவாதிகள் பயன்படுத்திய மொபைல் மற்றும் செய்மதி தொலைபேசி பற்றிய விபரங்கள், தடயவியல் அறிக்கைகள், வெளிநாட்டில் இருப்பவர்களுக்கும், பயங்கரவாதிகளுக்கும் உள்ள தொடர்பு குறித்த விபரங்கள் ஆகியவற்றையும் எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். இந்தியா ஏற்கனவே அளித்த சில விபரங்கள் குறித்து சந்தேகம் உள்ளது.

குறிப்பாக ஜி.பி.எஸ்., தகவல்கள் குறித்த விஷயங்களில் சந்தேகம் உள்ளது. பயங்கரவாதிகளுக்கு' சிம் கார்ட்' கொடுத்ததாகக் கூறப்படும் இரு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தொலை பேசியில் பேசிய விபரங்களையும் எங்களுக்கு தெரிவிக்க வேண்டும். இது போன்ற விபரங்களை பாகிஸ்தான் அதிகாரி கள், இந்தியாவிடம் கேட்டுள்ளனர்.



இதேவேளை, வெளியுறவு அமைச்சர் பிரணாப்முகர்ஜி நேற்று முன்தினம் டில்லியில் செய்தியாளர் களிடம் கருத்துத் தெரிவித்த போது, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நடந்து வந்த அமைதிப் பேச்சுவார்த்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மண்ணில் செயல்பட்டு வரும் பயங்கரவாதி கட்டமைப்புகளை ஒழிக்க, அந் நாடு மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இரு நாடுகளுக்கும் இடையே தடைப் பட்டுள்ள பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப் பதற்கு இது ஒன்று தான் வழி. மும்பை தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதி களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றார். (ஓ-6)

## 48 வயதில் பள்ளிக்கூடம் சென்று படிக்கும் பெண்

(சீனா)

சீனாவைச் சேர்ந்த ஷி சூ ஜின். அவர் தன் சொந்த ஊரில் மருந்துக் கடை நடத்தி வருகிறார். அவர் படிக்காதவர் என்பதால் வியாபாரம் செய்வதில் கஷ்டப்பட்டார். படிக்காததால் அவருக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது. இதனால் மீண்டும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பது என்று அவர் முடிவு எடுத்தார். அவர் பள்ளிக்கூடத்தில் சேர்வதற்காக அந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு சென்றபோது, அவரைப் பார்த்து பள்ளிக்கூட நிர்வாக ஊழியர்கள் அவரை அதிசயமாகப் பார்த்தனர். அவரை வீட்டில் இருந்து படிக்கும் படியும், அவருக்கு தேவையான உதவிகளை செய்வதாகவும் எப்போதாவது ஒருமுறை அல்லது இருமுறை ஆசிரியரை அனுப்பிவைக்கிறோம் என்றும் கூறினோம். ஆனால் அதற்கு அவர் மறுத்து விட்டார். படிப்பதற்கு பள்ளிக் கூடம் தான் சிறந்த இடம் என்று அவர் கூறிவிட்டார். கடைசியில் அவரை சேர்த்துக்கொள்வது என்று பள்ளிக்கூட நிர்வாகம் தீர்மானித்தது. அவர் 2ஆம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

என் கூடப் படிக்கும் பிள்ளைகள் எனக்கு உதவியாக இருக்கிறார்கள். ஆசிரியர் சொல்வதை எப்படி குறிப்பு எடுப்பது என்பதை எல்லாம் அவர்கள். சொல்லித் தருகிறார்கள் என்றும் ஷி சூ ஜின் தெரிவித்த அவர் எழுதப் படிக்கத் தெரிய வேண்டும், கொம்யூட்டரைப் பயன்படுத்த தெரிய வேண்டும்.பிறகு ஆங்கிலம் தெரிய வேண்டும் என்கிறார். (ஓ-6)

# உலக தரிசனம்

## அவுஸ்திரேலிய தீவு வேலைவாய்ப்புக்கு 34 ஆயிரத்து 684 பேர் விண்ணப்பிப்பு

அவுஸ்திரேலிய கிரேட் பரியரிலுள்ள ஹமில்டன் தீவின் பராமரிப்பாளர் வேலைக்கு உலகமெங்குமிருந்து 34ஆயிரத்து 684 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக குயீன்ஸ்லான்ட் மாநில அரசாங்கம் தெரிவிக்கிறது.

உலகின் மிகச் சிறந்த வேலை .என வர்ணிக்கப்பட்ட இந்த வேலைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்தது.

இந்த வேலைக்கு 200க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

6மாத கால இந்த பராமரிப்பாளர் வேலைக்கு இலவச விமானப் பயணச் சீட்டுக்கள், சொகுசு தங்குமிட வசதி என்பனவற்றுடன் 1இலட்சத்து 59 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் சம்பளம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வேலைவாய்ப்புக்கு விண்ணப்பித்து தெரிவாகிய 50 பேரின் பட்டியல் எதிர் வரும் மார்ச் 2 ஆம்திகதி வெளியிடப்படும். தொடர்ந்து இறுதி 11 விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை மே 3 ஆம் திகதி நடைபெறும்.

அதையடுத்து மே 6ஆம் திகதி நேர்முகத் தேர்வில் வெற்றிபெற்று தெரிவானவர் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

### கூண்டினுள் சிக்கிய புலி



இந்தோனேஷியாவில் சுங்காய் ஜெலம் நகரில் புலி ஒன்று கடித்து குதறியதில் 5பேர் இறந்தனர். இதையடுத்து அப் பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் கூண்டு வைக்கப் பட்டது.பலபேரை கொன்ற காட்டுப்புலி, கூண்டில் வைக்கப்பட்ட இறைச்சியை சாப்பிட வந்து மாட்டிக்கொண்டது. உறுமும் அந்த புலியை குளிர்விக்கத் தண்ணீர் ஊற்றுகிறார் ஊழியர் ஒருவர். (ஓ-6)

## பிரிட்டனில் புதிய விசா கட்டுப்பாடுகள் ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறையில்

(லண்டன்)

பிரிட்டன் விதித்துள்ள புதிய விசா கட்டுப்பாடுகளுக்கு இந்தியர்கள் மற்றும் ஐரோப்பிய யூனியன் அல்லாத நாடுகளைச் சேர்ந்தவர்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து முதல் நிலை பிரிவின் கீழ் பிரிட்டனுக்கு செல்வதற்கான குடியேற்ற நடைமுறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் வெற்றிடமாகவுள்ள பணியிடங்களில் முதலில் உள்நாட்டு தொழிலாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

இந்த அறிவிப்பை பிரிட்டன் உள்துறை அமைச்சர் ஜாக் ஸ்மித் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டார்.

கடந்த ஆண்டு இந்த முதல் நிலை பிரிவின் கீழ் பிரிட்டனுக்குச் சென்ற வெளி நாட்டவர்கள் 25ஆயிரம் பேர். இவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள்.

மேலும் , இந்தியர்கள் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேராதவர்களுக்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி இளநிலை பட்டப் படிப்பில் இருந்து முதுநிலையாக உயர்ந்தப் பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஊதியமும் 17 ஆயிரம் பவுண்ஸில் இருந்து 20 ஆயிரம் பவுண்ஸ் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டுப்பாடுகளின் மூலம் பிரிட்டனுக்கு செல்லும் இந்தியர்கள் மற்றும் ஐரோப்பிய யூனியனைச் சேராதவர்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறையும் என்று தெரிகிறது. (ஓ-6)

## பாகிஸ்தான் தலிபான் போராளிகள் வரையறையற்ற யுத்த நிறுத்தப் பிரகடனம்

பாகிஸ்தானின் சுவாட் பள்ளத்தாக்கைச் சேர்ந்த தலி பான் போராளிகள் வரையறை யற்ற யுத்த நிறுத்தமொன்று தொடர்பில் அறிவிப்புச் செய்துள்ளனர்.

மேற்படி பிராந்திய அரசாங்க அதிகா ரிகளுக்கும் போராளிக் குழுக்களுக்கு மிடையே கடந்த வாரம் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின் நிமித்தமே இந்த அறிவிப்பு செய்யப் பட்டது.



போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பிராந்தியத்தில் ஷரியா சட்டத்தை அமுல்படுத்துவது தொடர் பில் இந்த உடன்படிக்கையின் போது இணக்கம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

போராளிக் குழுவின் பிராந்தியத் தலைவரான மௌலானா பஸ்லுள்ளா தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றைத் தொடர்ந்து, மேற்படி யுத்த நிறுத்த அறிவிப்பு செய்யப்பட்டது. (ஓ-6)

## மோட்டார் சைக்கிள் திருடனை காட்டிக் கொடுத்த மட்டன் பிரியாணி

(பெங்களூர்)

வேலை பறிபோனதால், பிரியாணிக்காக மோட்டார் சைக்கிள்களை திருடினார் ஒருவர் . ஆனால் ,அவர் தினமும் இரவு ஹோட்டல்களில் சாப்பிடும் பிரியாணியே அவரைக் காட்டிக் கொடுத்தது.

பெங்களூரை அடுத்த மதுகிரியைப் பகுதியைச் சேர்ந்தவர் நரசிம்ம மூர்த்தி பக்கத்தில் உள்ள தொட்டபல்லபூர் என்ற இடத்தில் கோழிப் பண்ணையில் வேலை செய்து வந்தார். அந்த வேலையில் இருந்து நான்கு மாதம் முன் நீக்கப்பட்டார்.

மூர்த்திக்கு எதற்கு பணம் இல்லாவிட்டாலும், இரவு சாப்பிடும் பிரியாணிக்கு மட்டும் கையில் காசு இல்லை என்றால் டென்ஷன் ஆகி விடுவார்.கையில் காசு இருந்தபோது, நண்பர்களுடன் ஒவ்வொரு நாளும் ஹோட்டலுக்குச் சென்று மட்டன் பிரியாணி, சிக்கன் பிரியாணி என்று வெளுத்துக்கட்டுவார். வேலை பறிபோனதால், பிரியாணி சாப்பிட காசில்லாமல் கஷ்டப்பட்டார். அப்போதுதான் இந்தத் திருட்டு யோசனை வந்தது. நோட்டம் பார்த்து மோட்டார் சைக்கிள் திருட ஆரம்பித்தார்.

பெங்களூர் நகரில் சில இடங்களில் நான்கு மாதங்களில் 52 மோட்டார் சைக்கிள்கள் திருட்டுப் போயிருந்தது தொடர்பாக புகார் வந்தது. விசாரணையில் மோட்டார் சைக்கிள் சிலவற்றை தொட்டபல்லபூர் பகுதியில் பொலிஸார் கைப்பற்றினர். ஆனால், இதைத் திருடியவன் குறித்து சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. தொடர்ந்து விசாரணை செய்ததில், ஒரு ஹோட்டலில் இருந்து ஒரு பைக் சிக்கியது.

ஹோட்டல் உரிமையாளரிடம் விசாரித்த போது, " ஒருவர் தினமும் மட்டன், சிக்கன் பிரியாணி சாப்பிட வருவார். அவர் தான் கையில் காசில்லை என்று இந்த பைக்கை விட்டுச் சென்றார்" என்று கூறினார். பொலிஸ் உடனே உஷாராகி தீவிர விசாரணையில் இறங்கினார் பிடிபட்டார் மூர்த்தி, "பிரியாணிக்காகத் தான் மோட்டார் சைக்கிள்களை திருடினேன் இரண்டாயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரைக்கும் விற்றேன்" என்று ஒப்புக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து, 52 மோட்டார் சைக்கிள்களையும் பல்வேறு இடங்களில் இருந்து பொலிஸார் கைப்பற்றினர். (ஓ-6)

# இறுதி நாள் விறுவிறுப்பான ஆட்டத்துடன் முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிவு

## காம்ரன் அக்மல் அதிரடி சதம்



(கராச்சி)

இறுதி நாள் விறுவிறுப்பான ஆட்டத்தின் பின்னர் பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் வெற்றி தோல் வியின்றி முடிபடைந்தது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 21ஆம் திகதி கராச்சியில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக் களையிழந்து 644 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 240,திலான் சமரவீர 231 ஓட்டங்களையும் சங்கக்கார 70,வர்ணபுர 59 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் கனேரியா 3 விக்கெட்டுக்களையும் மலிக் 2 விக்கெட்டுக் களையும் உமர் குல்,யசீர் அரபாத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 574 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப் பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி காம்ரன் அக்மலின் அதிரடி சதத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 765 ஓட் டங்களை குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் அணித்தலைவர் யூனிஸ் கான் 568 பந்துகளில் (27 பவுண் டரிகள்,4 சிக்ஸர்கள் அடங்கலாக) 313 ஓட்டங்களையும் காம்ரன் அக் மல் ஆட்டமிழக்காமல் 184 பந்து களில் (8 பவுண்டரிகள்,5 சிக்ஸர்கள் அடங்கலாக) 158 ஓட்டங் களையும் இக்பால் 57,மலிக் 56, யசீர் அரபாத் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களை யும் குவித்தனர்.

பந்துவீச்சில் பெர்னான்டோ 2 விக்கெட்டுக்களையும் மென்டிஸ், முரளிதரன் மற்றும் மஹேல ஜெய வர்த்தனா ஆகியோர் தலா ஒரு விக் கெட்டையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் முதலாவது இன் னிங்ஸில் 121 ஓட்டங்கள் வித்தியாச த்தில் பின்னிலையிலிருந்த இலங் கை அணி இரண்டாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய இறுதி நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக் கெட்டுக்களை யிழந்து 144 ஓட்டங் களை எடுத்தது.

இதன் மூலம் முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபடைந்தது.

இதில் சங்கக்கார 65 ஓட்டங்க ளையும் சமரவீர ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் மஹேல ஜெய வர்த்தனா 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் உமர் குல்,டினேஷ் கனேரியா ஆகியோர் தலா 2 விக் கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டி சமனிலையான நிலையில் இரண்டாவதும் இறுதியு மான டெஸ்ட் எதிர்வரும் முதலாம் திகதி லாகூரில் ஆரம்பமாகிறது.

இப் போட்டியில் பாகிஸ்தான் அணியை தோல்வியிலிருந்து மீட் டெடுத்த அணித்தலைவர் யூனிஸ் கான் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

# முதலாவது இருபது-20 போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி

## ரெய்னா அரைச்சதமடித்தும் இந்தியா ஜொலிக்கவில்லை



(கிறிஸ்சேர்ஷ்)

மக்குலமின் சிறப்பான அரைச் சதத்தின் மூலம் நியூசிலாந்து அணி முதலாவது இருபது-20 போட்டியில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் நியூ சிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பய ணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20,5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது இருபது-20 போட்டி நேற்று கிறிஸ்சேர்ஷில் நடை பெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற நியூ சிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர் மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் டுக்களையிழந்து 162 ஓட்டங்களை எடுத்தது.

ஒரு கட்டத்தில் 9.4 ஓவர்களில் 82 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்து தடுமா றிய இந்திய அணியை சுரேஸ் ரெய் னா அரைசதம் அதிரடியாக விளாசி கௌரவமான நிலைக்கு கொண்டு சென்றார்.

இதில் சுரேஸ் ரெய்னா ஆட்ட மிழக்காமல் 43 பந்துகளில் (2 பவுண் டரிகள்,5 சிக்ஸர்கள் அடங்கலாக) 61 ஓட்டங்களையும் சேவாக் 10 பந் துகளில் (4 சிக்ஸர்கள் அடங்கலாக) 26 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 21, யூசுப் பதான் 8 பந்துகளில் (3 சிக்ஸர்கள் அடங் கலாக) 20 ஓட்டங் களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஓ பிறின்,புறஸ்லர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை யும் சௌத்தி,விக்டோரி,மக்குலம் மற்றும் ரைடர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 163 ஓட் டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூ சிலாந்து அணி மக்குலம்-குப்திலி னின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 18.5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட் டுக்களை மாத்திரமிழந்து 166 ஓட்டங் களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித் தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் மக்குலம் 49 பந்துகளில் (2 பவுண்டரிகள்,3 சிக்ஸர்கள் அடங் கலாக) 56 ஓட்டங்களையும் ஜேக் கப் ஓரம் 15 பந்துகளில் (3 பவுண் டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்கா மல் எடுத்ததுடன் குப்தில் 28 பந்து களில் (4 பவுண்டரிகள்,3 சிக்ஸர் கள் அடங்கலாக) 41 ஓட்டங்களை யும் ரோஸ் ரெய்லர் 20 பந்துகளில் (ஒரு பவுண்டரி,3 சிக்ஸர்கள் அடங் கலாக) 31 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்துவீச்சல் சகீர்கான்,இஷாந் சர்மா மற்றும் ஹர்பஜன் சிங் ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த் தினர்.

இவ் வெற்றியின் மூலம் நியூசி லாந்து அணி 2 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன் னிலையிலுள்ளது.

இப் போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு வழியமைத்த மக்குலம் ஆட்ட நாயகனாகத் தெரி வானார்.

தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான இருபது-20 போட்டி நாளை நடைபெறும்.

## சிவராத்திரி தினத்தன்று

# பெண்ணின் வாயிலிருந்து சிவலிங்கம் எடுத்த அதிசயம்

சிவராத்திரி தினத்தன்று வாயி லிருந்து சிவலிங்கம் எடுத்த அதிசய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இவ் அதிசய சிவலிங்கத்தை நாச்சிமார் கோயிலடியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் கண்ணன் அம்மா என்பவர் எடுத்துள்ளார்.

தொடர்ந்து 16 வருடங்களாக சிவராத்திரி தினத்தன்று அவர் வாய்வழியாக சிவலிங்கத்தை எடுத்து வருகின்றார்.

இம்முறையும் செப்பிலான சிவலிங்கத்தையும் ஹிரண்யகர் ப்ப சிவலிங்கத்தையும் அவர்வாயி லிருந்து எடுத்துள்ளார்.

இவ் அதிசய நிகழ்வை பெருந் திரளான பத்தர்கள் நேரில் கண்டு களித்தனர். (ச-7)



சிவராத்திரி தினத்தன்று வாயிலிருந்து எடுத்த சிவலிங் கத்தையும் அம்மா வாயினூடாக ஹிரண்ய கர்ப்பலிங்கம் எடுப்பதையும் படங்களில் காணலாம். (நன்றி-சாயி போட்டோ)

# சிறைச்சாலை ஊழியர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கத் திட்டம்

சிறைச்சாலைகளில் பணியாற் றும் புதிய ஊழியர்களிற்கு இராணு வப் பயிற்சிகளை வழங்குவதற்கு சிறைச்சாலைத் திணைக்களம் நட வடிக்கை எடுத்து வருகிறது.

கடந்தகாலங்களில் சிறைச்சாலை களில் இடம்பெற்றுவரும் சம்பவங் களைக் கவனத்திற் கொண் டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு வதாக திணைக்களத்தின் ஆணை யாளர் மேஜர் ஜெனரல் வஜிர விஜய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களிற்கு கைதிகளை அழைத்துச் செல்லும்போது விசேட பாதுகாப்புக்களை பொலிஸாரிடமி ருந்தே தற்போது பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும் இதனைத் தவிர்ப்பதற்காகவே ஊழியர்களிற்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படவுள் ளதாக அவர் தெரிவித்தார். (ச-14)

# தீக்குளிப்பு விஞ்ஞாபனம்

(கந்தர்மடம்)

கந்தர்மடம்சிவ உதயநாகபூஷணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவ மாசிமக தீக்குளிப்பு பங்குனி மாதம் 9ஆம் திகதி திங்கட்கிழமை மாசி மகத் தன்று மதியம் 12 மணிக்கு நடை பெறவுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி கொடியேற் றத்துடன் ஆரம்பமாகிய அலங்கார உற்சவம் தொடர்ந்து 15 நாட்கள் நடை பெறும். பங்குனி மாதம் 6ஆம் திகதி வெள்ளிக் கிழமை வேட்டைத் திருவி ழாவும் 7ஆம்திகதி சனிக்கிழமை சப் பறத் திருவிழாவும் 8ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தீர்த் தத்திருவிழாவும் மதியம் 12 மணி க்கு தீக்குளிப்பும் நடைபெறும். (ச-14)

## ஈழத்தமிழ் மக்களை...

சிலோன் குடியிருப்பில் வழங்கப்பட்ட 2 செண்ட் நிலத்தில் வீடு கட்டி வாழ்ந்து வந்தார்.

அங்கு சிவகாசி காளீஸ்வரி பட்டாசு தொழிற் சாலையில் வேலை பார்த்து வந்த இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

கையில் மண்ணெண்ணெய் கலன், ஆளும் திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் கொடியுடன் நேற்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒதுக்குப்புறமாக உள்ள உலங்கு வானூர்தி இறங்கும் தளத்திற்கு சென்ற அவர் அங்கு தன் உடலில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துள்ளார்.

அவரின் அலறல் ஓசை கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸார் அனைவரும் ஓடி வந்து கோகுலரத்தினத்தின் உடல் மீது சாக்குப் பைகளைப் போர்த்தித் தீயை அணைக்க முயற்சித்தனர். ஆனால் அதற்குள் உடல் கருகிய நிலையில் கோகுலரத்தினம் உயிரிழந்தார்.

சுருட்டப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியைப் பிரித்துப் பார்த்தபோது அதில் அவர் ஒரு கடிதம் எழுதி வைத்திருப்பது தெரியவந்தது.

அதில் தமிழகம் முதல்வர் கலைஞர் விரைவில் குணமடைய வேண்டும். இலங்கையில் தமிழர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடி வரும் ராமதாஸ்,திருமாவளவன், வைகோ, பழ.நெடுமாறன் ஆகியோரைக் கைது செய்யக்கூடாது என எழுதப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## சுமார் 5...

(வயது 26),புவனேஸ்வரி (வயது 21) ஆகியோர் காயமடைந்துள்ளனர். ஏனையோரின் பெயர் விபரம் கிடைக்கப் பெறவில்லை. (ச-5)

## முல்லைத்...

உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் 190 நோயாளிகளும் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் 195 பேரும் இருப்பதாக வைத்தியர் ஞானகுணாளன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை அரசினர் பொதுமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளில் ஒரு தொகுதியினரை மன்னார் அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் தற்போது 740 நோயாளிகளும் மெதடிஸ் கல்லூரியில் உள்ள தற்காலிக மருத்து முகாமில் 28 பேரும் சிகிச்சை பெற்று வருகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

## பெப்ரவரி மாத நிவாரண விநியோகம்

உலக உணவுத்திட்ட, தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டோருக்கான பெப்ரவரி மாத நிவாரண வழங்கலின் கீழ் பெப்ரவரி மாதத்திற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்டச் செயலகத்திலுள்ள உலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் இருந்து இன்று சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. எனவே ப.நோ.கூ. சங்கங்கள் மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் இருந்து வழங்கற் கட்டளையைப் பெற்று எதிர் வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களை முழுமையாகப் பெற்று விநியோக நடவடிக்கையினை ஆரம்பிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## நாடாளுமன்ற உறுப்பினர்...

நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வன்னிப் பெருநிலப்பரப்பில் படையினரின் எறிகணை, பீரங்கி தாக்குதல்களில் 2 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் 4 ஆயிரத்து 500 பேர் காயமடைந்தும் உள்ளதாக இரா.சம்பந்தன் கூறியிருந்தார்.

அது தொடர்பாகவே இரா.சம்பந்தன் மீது விசாரணை நடைபெற்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மக்கள் பிரதிநிதிகள் என்பதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள், கஷ்டங்கள் குறித்து தெரியப்படுத்த வேண்டியது தமது கடமை என இரா.சம்பந்தன் விசாரணையின் போது கூறினார் என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனிதப் பேரவலங்களை வெளியுலகிற்கு எடுத்துக் கூறுவதனை தடுக்கும் நோக்கிலேயே இரா.சம்பந்தன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், செல்வராஜா கஜேந்திரன், அரியநேந்திரன், ஜெயானந்த மூர்த்தி ஆகியோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புதுக்குடியிருப்பு பகுதியில்...

அவர் கூறினார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, சாலை, புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு வடக்கு போன்ற பகுதிகளினூடாக முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டுவரும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இந்த மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இராணுவத்தின் 53,55,57,58,59-வது படையணிகள் மற்றும் 4,8-வது விசேட படையணிகளைச் சேர்ந்த இராணுவத்தினரே இந்த முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

படையினரின் இந்த முன்னேற்றத்தை தடுப்பதற்காக புலிகள் தீவிர முயற்சிகளை எடுத்த போதிலும் அவை படையினரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளன என்றார்.

எனினும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இது தொடர்பாக எந்தவித தகவலும் வெளியாகவில்லை என பி.பி.சி.தெரிவித்தது. (ச-5)

## நவீன ரக ஆயுதங்களை இறக்க...

ஒட்டுக்கேட்டதில் தெரியவந்துள்ளன. அத்துடன் பதிவுகள் எம்மிடம் உள்ளன யுத்தம் முடிபடைந்ததும் இந்தவிடயம் தொடர்பான மேலதிக தகவல்கள் வெளியிடப்படும்.

ச்ர்வதேச ஆயுத வர்த்தகர்களிடம் இருந்து ஏவுகணைகளைக் கொள்வனவு செய்து தாக்குதல் நடத்துவதன் மூலம் படையினரை பலமிழக்கச் செய்வதற்கு புலிகள் முயற்சிக்கின்றனர் என்பது எமக்குத் தெரியும் புலிகளுக்கு போர்நிறுத்தம் என்பது தேவையில்லை. மாறாக அவர்களின் ஆட்பலத்தை மறுசீரமைத்து சிறந்த பலத்துடன் மீண்டும் தாக்குதல் நடத்தவே அவர்களின் தேவையாகவுள்ளது. இதுவே கடந்த காலங்களில் இடம்பெற்றன.

புலிகள் விட்டுச்சென்ற 122 மில்லி மீற்றர் ஆட்டிலறியை அண்மையில் படையினர் கைப்பற்றினர். இது போர் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அதிகமான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய அவர்கள் முயற்சிக்கின்றனர் என்பது எமக்குத் தெரியும் என்றார். (ச-5)

## பங்களாதேஷில்...

கலகத்தை அடக்க இராணுவம் விரைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

செய்திகள் மேலும் தெரிவிப்பதாவது, பங்களாதேஷின் புற இராணுவப் படையான பங்களாதேஷ் ரைபிள்ஸ் படையின் தலைமையகம் தலைநகர் டாக்காவின் பில்கானா பகுதியில் உள்ளது. நகரின் மையப் பகுதியில் உள்ள இந்த தலைமையகத்தில் நேற்று திடீரென படையினர் புரட்சியில் இறங்கினர்.

அவர்கள் கைகளில் துப்பாக்கியுடன் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். சம்பள உயர்வு காரணமாக இந்த கலகம் வெடித்ததாகவே கூறப்படுகிறது.

சரமாரியான துப்பாக்கிச் சூட்டால் அந்தப் பகுதியே பெரும் பீதியில் ஆழ்ந்தது. இந்தத் திடீர் கலகத்தில் பங்களாதேஷ் ரைபிள்ஸின் இயக்குநர் உள்ளிட்ட நான்கு இராணுவ அதிகாரிகள் உட்பட 30 பேர் கொல்லப்பட்டனர்.

பின்னர் துப்பாக்கிச் சூட்டில் இறங்கிய வீரர்கள் தலைமையகம் அருகில் உள்ள வர்த்தக வளாகத்தைக் கைப்பற்றித் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தலைமையகம் உள்ள பகுதியில் வசித்து வந்த பொதுமக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் அவர்கள் உத்தரவிட்டனர். இதையடுத்து மக்கள் கூட்டம் கூட்டமாக அங்கிருந்து தப்பி ஓடினர்.

1971ஆம் ஆண்டு பிறந்தது பங்களாதேஷ். அதன் பின்னர் அங்கு ஜனநாயக முறைப்படியான ஆட்சிகளை விட இராணுவப் புரட்சிகளும் இராணுவ ஆட்சிகளுமே அதிகரித்துக் காணப்பட்டன.

அங்கு அடிக்கடி புரட்சிகள் வெடிப்பதும் எதிர் புரட்சிகள் நடப்பதும் சகஜமான ஒன்று. இந்த நிலையில் புதிய பங்களாதேஷ் அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் திடீரென வெடித்துள்ள இந்த கலகத்தால் அந்நாட்டு மக்கள் பேரதிர்ச்சி அடைந்துள்ளனர். இவ்வாறு அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## போரை நிறுத்த முடியாது...

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் போரை நிறுத்த வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த வேண்டுகோள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துக்கூறிய போதே அமைச்சர் மகிந்த சமரசிங்க இவ்வாறு தெரிவித்தார்.


போரில் படையினர் வெற்றி பெற்றுள்ளனர். போரின் இறுதிக்கட்டம் வந்துவிட்டது.

இந்நிலையில் போரை நிறுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறினார்.

புலிகள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு சரணடையவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் ஏன் கோரிக்கை விடுக்கவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதேவேளை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விளக்கமளித்த பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல, விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து சரணடைந்தால் போர் நிறுத்தம் என்ற சொல்லைக்கூட அனைத்துலக நாடுகள் உச்சரிக்கவேண்டிய தேவை இல்லை என்றார். (ச-5)


## 30ஆம் நாள் நினைவுகளுடன் 31ஆம் நாள் நீர்க்கடன் நிகழ்வுகள்



மண் மகிழ 20-11-1941 | நெஞ்சம் நெகிழ 28-01-2009

அமரர் பிள்ளையினார் சிவபாதம்



வைகறைக்காக நாம் காத்திருக்க
வானத்தில் எங்கள் கறுப்புச்சூரியன் அன்று
வரவேயில்லை.
காரிருள் பூமியில் மட்டுமல்ல
எங்கள் இதயங்களிலும்தான்.
ஒரு நல்ல நடிகனை நாடு இழந்தமை பற்றியும்
ஒரு பேச்சாளனின் பிரிவு பற்றியும்
பேசியது உலகு.
நாமோ......
பேச்சிழந்தோம்.... மூச்சிழந்தோம்.
நீ
உனக்காகவும் உழைத்தாய்.
ஊருக்காகவும் உழைத்தாய்.
உனது உன்னதங்களை
உணர்கிறோம்.... உருகிநிற்கிறோம்.

எமதில்லத்தில் *26.02.2009* இன்று காலை *7.00* மணியளவில் நடைபெறும் அந்தியேஷ்டிக் கிரியைகளிலும் பின் சபிண்டிகரண நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"இராஜினி இல்லம்"
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

C-(2148)

*(தயைகூர்ந்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.)*


## 5 ஆம் கட்டமாக திருகோண...

முத்தம்மா (வயது 75) மன்னார், செல்வநாயகி (வயது 62) யாழ்ப்பாணம், பிரதீசன் (வயது 25) புதுக்குடியிருப்பு, செல்வரத்தினம் (வயது 75) யாழ்ப்பாணம், எஸ்.கமலாம்பிகை (வயது 65) வட்டக்கச்சி, ஜே.மேரி ஜொசப்பின் (வயது 73) கிளிநொச்சி, தேவநாயகம்பிள்ளை (வயது 74) பொக்கணை,

எஸ்.தயாதிரியன் (வயது 6) மல்லாவி, ஆச்சிமுத்து (வயது 74) மல்லாவி, செல்லம்மா (வயது 79) தலியன்குளம், அகஸ்ரின் (வயது 63) கிளிநொச்சி, சோதிராசா (வயது 67) அரியாலை, தம்பிராசா (வயது 76) மல்லாவி, வில்லுதேவன் (வயது 74) மன்னார், மயூரதி (வயது 28) யாழ்ப்பாணம்,

நரசிங்கம் (வயது 76) வேலணை, நந்தகுமார் (வயது 56) வவுனிக்குளம், கி.லக்சுமி (வயது 77) கந்தானை, கே.அருள்மணி (வயது 58) புதுக்குடியிருப்பு, சுபாசினி (வயது 32) மருதங்கேணி, மோகனதாஸ் (வயது 32) கிளிநொச்சி, தேவராணி (வயது51) மருதங்கேணி, சுபத்திரா (வயது 6) முல்லைத்தீவு,

எம்.நவமலர்சேகரி (வயது 38), எம்.அபிசேக் (வயது 10) முல்லைத்தீவு, ஏ.இராசேந்திரன் (வயது 47) கிளிநொச்சி, அமராவதி (வயது 73) கிளிநொச்சி, கெலன்மேரி (வயது 38) இரணைப்பாலை, எம்.கமலேஸ்வரி (வயது 59) இரணைப்பாலை, கிரிசாந்தினி (வயது 8) ஆண்டான்குளம், ஜெயலக்சுமி (வயது 30) ஆண்டான்குளம்,

விதுசன் (வயது 3) ஆண்டான்குளம், விதுசியா (வயது 1) ஆண்டான்குளம், எம்.நவமலர் சேகரி (வயது 40) கிளிநொச்சி, எஸ்.பவிசாத் (2 1/2 வயது) கிளிநொச்சி, கே.பிரசாந்த் (2 வயது) முல்லைத்தீவு, யதுசா(8 மாதம்) முல்லைத்தீவு, எஸ்.குணசீலன் (வயது 29) முல்லைத்தீவு, எஸ்.புவனேஸ்வரி (வயது 63) விஸ்வமடு,

இ.பாலமணி (வயது 66) விஸ்வமடு, கே.சூரியகுமார் (வயது 40) புதுக்குடியிருப்பு, கந்தையா (வயது 75) யாழ்ப்பாணம், ரி.சந்திரலதா (வயது 90) மாங்குளம், கிதுஷா (வயது 10) மாங்குளம், சிவக்கொழுந்து (வயது 84), மாங்குளம், எஸ்.தர்மராஜா (வயது 46) மாங்குளம்,

சங்கவி (வயது 4) மாங்குளம், பார்வதி (வயது 48) அக்கராயன்குளம், புஸ்பராணி (வயது 56) புதுக்குடியிருப்பு, அன்ரன் யோசப் (வயது 55) வவுனியா, ரி.சின்னத்தம்பி (வயது 81) வட்டக்கச்சி, எஸ்.ஜெனனி (வயது 34) முல்லைத்தீவு, றோசாரி (வயது 6) முல்லைத்தீவு, சறோஜன் (வயது 4) முல்லைத்தீவு,

வினோஜா (வயது 28) கிளிநொச்சி, வினோஜன் (3 மாதம்) கிளிநொச்சி. (ச-5)


CIMA MCS
Supported By UNDP/JRRP
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
Certificate Level 28.02.2009 Sat 8AM
Managerial Level 01.03.2009 Sun 1PM
பதிவுகளை 27.02.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்
விபரங்களுக்கு- 324 Palaly Road, Near Parameswara junction, Bus Root-764


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.